



அறைவு 02 இயம் 12 October 26 - November 01, 2013

# மலைமுரசு

MALAIMURASU

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்

வார இதழ்

விலை : 25.00 பக்கங்கள் : 16 Registered as a newspaper in Sri Lanka பிரதி சனிதோறும் வெளியாகும் வார இதழ்


# ஆட்கடத்தல் சந்தேகநபரின் வங்கியில் 400 மில்லியன்

ஆஸ்திரேலியாவிற்கு ஆட்களைக் கடத்தினார் என்ற குற்றச்சாட்டில் அண்மையில் கைதான திருகோணமலை மீன் வர்த்தகரின் வங்கிக் கணக்குகளில் சுமார் 400 மில்லியன் ரூபாய் பணம் வைப்பிலிடப் பட்டிருப்பதாகத் தெரியவந்துள்ளது. ஆட்களைக் கடத்தினார்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களிடம் கடுமையான விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

அதன் போதே இக் கடத்தல்களுக்குப் பிரதான சூத்திர தாரியாக திருகோணமலை மீன் வர்த்தகப் புள்ளியொருவர் செயற் பட்டிருப்பதைக் காவல் துறையினர் தெரிந்துகொண்டனர். அதனைத் தொடர்ந்து அவரைக் கைது செய்யும் நடவடிக்கைகளை முன்னெடுத்த போது தான்

03

## "தாயைவிடத் தமிழரசுக் கட்சியையே நேசிக்கின்றேன்" - சாந்தகுமார்

கடந்தவாரம் கட்சி தாவும் சர்ச்சைக்குள் அகப்பட்டுக் கொண்ட திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபையின் சல்லிப் பிரதேச தமிழரசுக் கட்சி உறுப்பினரான ஆ.சாந்தகுமார் தான் "தாயை விடத் தமிழரசுக் கட்சியியையே" நேசிப்பதாக தெரிவித்தார்.

தற்காலிகச் சாரதி நியமனம் ஒன்றினைத் தடுத்து நிறுத்துவதற்காகத் தான் கட்சி தாவுவேன் என வெருட்டியதாக வெளிவந்த செய்தியையிட்டு மலைமுரசிற்கு வரைந்த கடிதத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித் துள்ளார்.

03

## 96 மில்லியனில் 170 திட்டங்கள்

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்த வருடம் 170 அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்வதற்காக 96 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதில் சுகாதாரத்துடன் தொடர்புடைய 129 செயற்றிட்டங்களும் சிறுவர் மேம்பாட்டுடன் தொடர்புடைய 19 திட்டங்களும் விளையாட்டுத்துறை அபிவிருத்திக்கான 13 செயற் திட்டங்களும், 5 சமூகசேவைத் திட்டங்களும் எட்டு சுதேசிய

03



## துட்டகைமுனுவிடம் இருந்த மனிதாபிமானம் கூட மகிந்த அரசிடம் இல்லை - ஜனா

தமிழின உணர்வுடன் விளையாடுவதே சிங்களத்தின் பொழுது போக்காகப் போய்விட்டது. துட்டகைமுனு விடம் இருந்த மனிதாபிமானம் கூட மகிந் அரசிடம் காணமுடியாததுதான் இங்கு முரண்நகை என கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கோ.கருணாகரம் (ஜனா) அறிக்கையிட்டுள்ளார்.

03

## கொலையுண்டவரின் மனைவி சர்வதேசக் காவல்துறையின் தேடப்படுவோர் பட்டியலில்

திருகோணமலையை அதிர்ச்சியடைய வைத்த கொலைகளுள் ஒன்றான ஈஸ்வரதாசன் கேதீஸ்வரனின் கொலைச் சந்தேக நபர்களுள் மூன்றாவதாகப் பெயர் இடப்பட்ட அவரது மனைவியை சர்வதேசக் காவல்துறை தேடுவோர் பட்டியலில் இணைத் துள்ளது.

2012ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18ம் நாள் இரவு 8.45 மணியளவில் கழுத்து அறுக்கப்பட்டுக் கொல்லப்பட்ட கேதீஸ்வரன் என்ற இளம் குடும்பத்தரின் கொலையுடன் தொர்புடையவராக அவரது மனைவி ஹம்சத்வனி பெயரிடப்பட்டிருந்தார். எனினும் அவரைக் கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்த முடியாதிருப்ப தாலேயே அப் பெண்ணைக் கைது

03







## மட்டக்களப்பில் எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் தமிழியல் விருதுகள் விழா

ஈழத் தமிழரிற்குத் தமிழியல் விருதுகளை வருடாந்தம் வழங்கிவரும், டாக்டர் ஓ.கே. குணநாதன் அவர்களின் மேலாண்மையின் கீழ் மட்டக்களப்பில் இயங்கிவரும் எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் "தமிழியல் விருது வழங்கும் விழா" கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு மகாஜனாக் கல்லூரியின் "கவிஞர் எருவில்மூர்த்தி"

03

## இரண்டு டொலருடன் சூதாடிய இலங்கையின் கல்வி அமைச்சர்

அமெரிக்க களியாட்ட நகரமான லாஸ்வேகாஸ் நகரில் 2 டொலர் பணத்தைக் கட்டித் தான் சூதாட்டத்தில் கலந்து கொண்டதாக இலங்கையின் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திசானாயக்கா தெரிவித்துள்ளார். ஜலண்ட நாளாந்த ஆங்கிலப் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியின் போதே அமைச்சர் இவ்வாறு

03




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
159A, 2ஆவது மாடி, கடல் முக வீதி,
திருக்கோணமலை.
malaimurasu@hotmail.com
0754252042

## வணக்கம்

### பயணமும் பணமும் !!!

ஒரு ஆட்கடத்தல்காரனின் கணக்கில் 400 மில்லியன் ரூபாய்கள் இருக்கின்றது என்ற செய்தி வெளியானதைத் தொடர்ந்து அந்தப் பணம் யாருடையது? என்ற கேள்வி எம்முன் எழுந்தது.

திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்ற எம் முதுமொழிக்கப்பால் திரைகடல் ஓடத் திரவியம் இழந்து நிற்கின்றோம் நாம் என்பதே உண்மைபோல் இருக்கின்றது.

வருபவர்களைத் திருப்பி அனுப்புவதில் மிகக் குறியாக வெளிநாடுகள் இருக்கின்ற நிலையில் நாமோ போவதற்குக் குறியாக இருக்கின்றோம்.

பயணிப்பவர்கள் எவ்விதமான எண்ணத்துடன் பயணிக்கின்றார்கள் என்பதை விடுத்து, அவர்கள் ஏன் பயணிக்க வேண்டும் என்று பார்த்தால் உண்மையில் எமது நாட்டின் நிலை அதைத்தான் ஊக்குவிக்கின்றது என்பதைப் புரிந்து கொள்ள முடிகின்றது.

ஆயுதப் போர் முடிந்த பின் ஒட்டுமொத்த இனத்தையும் பாதித்துக் கொண்டிருப்பது பொருளாதாரப் போர் தான். யுத்தம நடைபெற்றுக் கொண்டிருந்த போது எமது பொருளாதார நடவடிக்கைகளில் ஒரு சமத்துவம் காணப்பட்டே இருந்தது. அதனிலும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் நிலவிய அச்சமநிலையின் தாக்கம் ஏனைய பிரதேசங்களிலும் சிறிதளவேனும் தாக்கத்தைக் கொண்டிருந்தது.

தற்போது போரோய்ந்த பிரதேசத்தில் பொருளாதாரத் தேட்டத்தில் எமக்கிருக்கும் நிலை கொஞ்சம் தர்ம சங்கடமாகவே இருக்கின்றது. வெளிப்படையாகச் சொல்லப் போனால் போர்க்காலத்தில் தமிழ்ப் பிரதேசங்களில் தமிழர்களுக்கே வேலை வழங்க நிர்ப்பந்திக்கப் பட்டிருந்தது. தற்போது யாரும் எங்கும் வேலை செய்யலாம் என்ற நிலை உள்ள போது ஆளணி ஏனைய திசைகளிலிருந்து வடக்குக்கிழக்கிற்குள் பிரவகிக்கின்றது.

இதனால் வேலைவாய்ப்பின் சமமின்மை பெருகுகின்றதால் கடற்பயணமும், அதனூடாக கிடைக்கும் என கனவு காணும் காசும் எம்மை இயக்குகின்றது.

நானூறு மில்லியன் ரூபா ஒரு கடத்தல்காரனின் கணக்கிலிருக்கின்றது என்றால் மொத்தமாக இந்தக் கடத்தலுக்கு நாம், தமிழர்கள் செலுத்தியுள்ள தொகை எவ்வளவு? அந்தப் பணம் எங்கிருந்து வந்தது?

அந்தப் பணத்தை எமது மண்ணில் முதலீடு செய்து வருமானத்தைப் பெற்றுக் கொள்ள முடியாதா? மாதாந்த வருமான வீதம் இரண்டாகக் காணப்படுமாயின் மாதம் இம் முதலீட்டின் ஊடாக எமக்குக் கிடைக்கும் வருவாய் 8 மில்லியன்கள். இவ்வருமானத்தைப் பங்கிட்டால் நாம் ஏன் பணத்துக்காகப் பயணிக்க வேண்டும்?.....

## காணாமற்போனோரின் தகவல்களை வழங்கும் இறுதித் திகதி - 30.10.2013



மட்டக்களப்பு மாவட்டத்தில் காணாமல் போனோரது விபரங்களைச் சமர்ப்பிக்குமாறு கடந்தவாரம் அதற்குப் பொறுப்பாகவுள்ள பணிப்பாளர் திரு.அ.செல்வேந்திரன் அவர்கள் வேண்டுகோள். விடுத்திருந்தார். அதற்கான இறுதி தினம் எதிர்வரும் 30ம் திகதியுடன் முடிவடைகின்றது. அக்காலப்பகுதிக்குள் காணாமல் போனோர் தொடர்பான விபரங்களை நேரடியாகவோ அல்லது அ.செல்வேந்திரன், எல்லைவீதி தெற்கு, மட்டக்களப்பு எனும் முகவரிக்குத் தபால் மூலம் அனுப்பி வைக்குமாறு கேட்டுள்ளார். (சச்சு)

## நான்கு வருடங்களின் பின் சித்தி



2008ம் ஆண்டின் பின்னர் அதாவது கடந்த 4 வருடங்களின் பின்னர் குச்சவெளி தி/விவேகானந்தா மகா வித்தியாலய பாடசாலை மாணவி செல்வி நவராஜன் ஆரவி அவர்கள் தரம் 5 புலமை பரிசில் பரீட்சையில் 159 புள்ளி பெற்று சித்தியடைந்துள்ளார்.

## மாகாண அபிவிருத்தித் திட்டங்கள் சில மக்களின் கைகளில்...

கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசன அமைச்சின் 310 மில்லியன் ரூபா செலவில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள அபிவிருத்தி திட்டங்கள் எதிர் வரும் 28 ஆம் திகதி கையளிக்கப்படவுள்ளதாக கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சரும், அமைச்சரவையின் பேச்சாளருமான எம்.எஸ்.உதுமா லெப்பை தெரிவித்தார்.

கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள அபிவிருத்தி திட்டங்கள் மக்களிடம் கையளிப்பது தொடர்பான மீளாய்வுக் கூட்டம் மட்டக்களப்பு இந்து இளைஞர் கலாசார் மண்டபத்தில் இடம் பெற்றபோது இதற்கு தலைமை வகித்து உரையாற்றிய அமைச்சர் மேற்கண்ட வாறு குறிப்பிட்டார். அன்றைய தினம் மேற்படி பாலங்களையும், கட்டிடங்களையும் அமைச்சர் பார்வையிட்டமையும் குறிப்பிடத்தக்கது.



(பைஷல் இஸ்மைல்)

## கணவனைக் காப்பாற்ற பாலியல் இலஞ்சம்

காட்டை அழித்தவருக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்கு அவரின் மனைவியிடமிருந்து பாலியல் இலஞ்சம் கோரினார் என குற்றஞ்சாட்டப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பிபிலை வனப்பிரிவைச் சேர்ந்த உத்தியோகஸ்த்தர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இவர் மீதான விசாரணை முடிந்துவிட்டதாக வழக்குத் தொடுநர் அறிவித்ததைத் தொடர்ந்து நீதவான் இந்த வனவள அதிகாரியை 15,000 ரூபா காசு மற்றும் தலா 500,000 ரூபா பெறுமதியான இரு சரீரப்பிணைகளிலும் விடுவித்தார்.

# காத்தான்குடியுடன் தமிழ்க் கிராமங்கள் சட்டத்திற்கு முரணானது - பொன். செல்வராசா

காத்தான்குடி மாநாகரசபை எல்லைக்குள் ஆரையம்பதிப் பிரதேசக் காணிகளை உள்ளீர்க்கும் சட்டப் புறம்பான நடவடிக்கையொன்று மேற்கொள்ளப் பட்டுள்ளதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அறிக்கையிட்டுள்ளது.

வர்த்தமானி அறிவித்தலையும் மீறி மேற்கொள்ளப்படும் இந் நடவடிக்கையைத் தாம் கடுமையாகக் கண்டிப்பதாக அக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான பொன்-செல்வராசா தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் மக்கள் மட்டக்களப்பிலோ அல்லது ஆரையம்பதியிலோ வாழ்வதை நாம் எப்போதுமே எதிர்க்கவில்லை. ஆனால் எல்லைகள் தொடர்பிலேயே நாம் அதிக கவனம் செலுத்துகின்றோம்.

ஏற்கனவே காத்தான்குடி வடக்கிலும் காத்தான்குடி தெற்கிலும் எல்லைகளை நிர்ணயிப்பதில் பெரும் சிக்கல்கள் தோன்றியுள்ளன. அதனிலும் வடக்கு எல்லைக்குள் இருக்கும் இரண்டு கிராமங்கள் மண்முனை வடக்குப் பிரதேசச் செயலாளர் பிரிவினுள் வர்த்தமானி மூலம் உள்ளடக்கப்பட்டுள்ள போதும் அக்கிராமங்களை உத்தேச காத்தான்குடி மாநகரசபை எல்லைக்குள் கொண்டுவரும் முனைப்புக்கள் நடைபெறுவதாக அறிகின் றோம்.

அவ்வாறே காத்தான்குடியின் எல்லையாக டீன் வீதி அமைந்துள்ள நிலையில் அவ்வீதிக்கு அப்பால் 30 தொகுதிகளுக்குக் காணி அனுமதிப் பத்திரத்தை போர் உச்சம் பெற்றிருந்த காலப் பகுதியில் காத்தான்குடிப் பிரதேசச் செயலாளர் வழங்கியுள்ளார். இக் காணிகள் ஆரையம்பதிப் பிரதேசச் செயலகத்திற்கு உட்பட்டவையாக இருந்த போதும் எவ்வாறு காத்தான்குடிப் பிரதேசச் செயலாளரால் காணி உத்தரவுப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது என்பதை கருத்திற்கொண்டால் அச் செயற்பாடு ஓர் அத்துமீறலாகவே இருப்பதைக் காண முடிகின்றது. இப்போதும் ஆரையம்பதிப் பிரதேசசபைக்குட்பட்ட வர்த்தக நிலையங்களுக்கு காத்தான்குடி நகர



சபையாலேயே வரி இறுப்புச் செய்யப்படுகின்றது. இவ்வாறான காணி அத்துமீறல் நடவடிக்கைகளையே நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம் என பொன். செல்வராசா மேலும் தெரிவித்தார்.

"மட்டக்களப்பு மாவட்டத்தில் 18 வயதிற்கு குறைந்த யுவதிகளின் கருத்தரிப்பு வீதம் 16 வீதமாக உள்ள நிலையில் இது தேசிய மட்டத்தில் 6.5 வீதமாகவே காணப்படுகின்றது. இதற்கு காரணம் இனவிருத்தி சுகாதார அறிவு இளம் யுவதிகளிடம் இன்மையே" என இலங்கை குடும்ப திட்டமிடல் சங்க திட்ட முகாமையாளர் கே.யோகேஸ்வரன் தெரிவித்தார்

## மக்கள் வங்கியினரின் மக்கள் சந்திப்பு

மக்கள் வங்கியின் பொது முகாமையாளர், பிரதி பொது முகாமையாளர்கள் உட்பட வங்கியின் உயர் மட்ட தலைவர்கள் திருகோணமலையில் தமது வாடிக்கையாளர்கள், மற்றும் பொது மக்களை சந்திக்க விசேட நிகழ்ச்சி திட்டமொன்றை 26.10.2013 சனிக்கிழமை மேற்கொள்ளவுள்ளாரகள்.

பிரதான நகரப்பகுதி உப நகர்ப்பகுதிகளை அண்டிய வீதிகள் தோறும் நடைப்பவனியாக வியாபார நிலையங்கள், அலுவலகங்களுக்கு வருகை தந்து மக்களை சந்திக்க வுள்ளார். மாவட்டத்தின் அனைத்து மக்கள் வங்கி ஊழியர்கள், வங்கியின் தொழிற்சங்கத் தலைவர்கள் மட்டக் களப்பு, அம்பாறை மாவட்டங்களின் ஊழியர்கள், மற்றும் பிரதிநிதிகளும் இப் பவனியில் கலந்து கொள்வர் காலை 9 மணிக்கு இலங்கை மத்திய வங்கியின் திருகோணமலைப் பிரதேச அலுவல கத்திலிருந்து இந்த நடை பவனி ஆரம்பிக்கப்படவுள்ளது.

மேலும் திருமலை மாவட்டத்தில் உள்ள 7 மக்கள் வங்கிக் கிளைப் பிரதேசங்களிலும் இந் நடைபவனி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## ஊருக்குள் புகுந்த யானைகளின் தர்பார்.....

24ம் திகதி நல்லிரவில் சம்மாந்துறைப் பிரதேசத்துக்குள் நுளைந்த காட்டு யானைகள் கூட்டம் பல பிரிவுகளாக பிரிந்து சம்மாந்துறை கல்லரிச்சல், கைகாட்டி, மலையடிக்கிராமம் போன்ற பிரதேசங்களிலுள்ள கடைகள், வீடுகள், தோட்டங்கள் என்வவற்றுக்கு பலத்த சேதத்தை ஏற்படுத்தியுள்ளது. (எம்.ரீ.எம்.பர்ஹான்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆட்கடத்தல்....

அவர் தலைமறைவாகியிருப்பது காவல்துறையினருக்குத் தெரிய வந்தது. எனினும் தொடர் தேடுதல் நடவடிக்கையின் போது கடந்த மாதம் அவர் கைது செய்யட்டிருந்தார். அதனைத் தொடர்ந்து மேலும் சிலர் கைதாகவே தற்போது மொத்தமாக 31 சந்தேகநபர்களுக்கெதிராக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

இவ்விசாரணைகளின் போதே கடத்தல்காரனின் கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ள பணத் தொகை வெளி வந்துள்ளது. இவரே மனிதக் கடத்தல் செயற்பாட்டின் முதுகெலும்பாகச் செயற்பட்டவர் என்ற சந்தேகத்தை மேலும் வலுவாக்கும் தகவலாகவே இப் பணமுதலீடு உள்ளது. அதன்படி பல நூற்றுக் கணக்கானவர்களை கப்பல் மூலம் வெளிநாட்டுக்கு இவர் கடத்தியிருப்பது தெரியவந்துள்ளது.

இவ்வாறு கடத்தப்படுபவர்களிடம் இருநூறாயிரம் தொடக்கம் எண்ணூறாயிரம் வரை பணத்தை அறவிட்டுள்ளதாக காவல்துறைத் தகவல் தெரிவிக்கின்றது.

கைதாகியுள்ள 31 சந்தேக நபர்களில் 27 பேருக்கு எதிராகத் தடுப்பாணை பெறப்பட் டிருப்பதாகவும் மேலும் நால்வருக்கான தடுப்பாணையை நீதிமன்றத்திடம் எதிர்பார்த்திருப்பதாகவும் காவல்துறைச் செய்திகள் தெரிவிக்கின்றன. அத்துடன் இவர்கள் அனைவரதும் வங்கிக் கணக்குகளை ஆராய்வதற்கான அனுமதிக்காகவும் தாம் காத்திருப்பதாகக் காவல்துறை அறிவித்துள்ளது.

## தாயைவிடத்...

அவர் மேலும் தெரிவிக்கையில் என் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை முற்றாக நிராகரிக்கின்றேன்.

பட்டணமும் சூழலும் பிரதேச சபையின் மாதாந்த அமர்வு கடந்த 10ம் திகதி நடைபெற்றது இராமையா நிஷாந்தன் பிரதி தவிசாளர் தனது மனைவியின் சகோதரனுக்கு சாரதி அனுமதி வழங்க வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

அதற்கு நான் பதிலழிக்கையில் ஏற்கனவே உங்களுடைய மனைவியின் இரு சகோதர்கள் சபையில் கடமை புரிகின்றார்கள் மேலும் ஒருவருக்கு கடமையாற்ற அனுமதி வழங்க முடியாது. அப்படி அனுமதி வழங்கப்படும் பட்சத்தில் நான் சபையை விட்டு வெளியேறுவேன் என கூறினேன் எனக்கும் கட்சிக்கும் சேறு பூசியுள்ளார்.

நான் எனது தாயை விட தமிழரசுக் கட்சியை நேசிப்பவன், இதை தமிழ் மக்களாகிய உங்களுக்கு தெரிவிக்க விரும்புகின்றேன் என்று தெரிவித்தார்.

## 2 டொலருடன்....

தெரிவித்துள்ளார். தான் 2 டொலர் பணத்துடன் தனது ஆட்டத்தை ஆரம்பித்த போதும் அங்கு பணியில் இருந்த பெண்கள் தன்னை 140 டொலர்கள் வரை பந்தயம் கட்ட ஊக்கமளித்தாகவும் அது அவர்களுக்குச் சாத்தியப்படவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கசினோ சூதாட்டம் தொடர்பாகத் தனது கருத்துக்களை செவ்வியிட்ட அவர் "கசினோ தவறான விளையாட்டு அல்ல.

பரநாட்டவர்கள் கசினோவில் பல மில்லியன்களை செலவழிக்கின்றார்கள் என்றால் விருப்பமுடைய இலங்கையர் கசினோவில் விளையாட அனுமதிக்கலாம் தானே?.

ஆனாலும் நாம் அதனை எதிர்க்கும் பக்கத்தவர்களதும் கருத்துக்களுக்குக் காதுகொடுக்க வேண்டும். இலங்கை நாட்டிற்குப் பெரும் வருமானத்தை ஈட்டித்தரும் இச்சூதாட்டத்திற்கு தான் எதிர்ப்பல்ல" என்று மேலும் தெரிவித்துள்ளார்.

## 96 மில்லியன்....

வைத்தியத்துறை திட்டங்களும், கூட்டுறவு அபிவிருத்திக்கான ஒரு செயற்திட்டமும் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மாவட்ட வைத்தியசாலைகள்இ தள வைத்தியசாலைகள் மற்றும கிராமிய வைத்தியசாலைகளுக்கு தேவையான வளங்களை பெற்றுக் கொடுப்பதற்கும் சுகாதார அலுவலகங்களின் வசதிகளை மேம்படுத்துவதற்கும் இதனுடாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தமிழியல்...

எருவில்மூர்த்தி" தமிழியல் அரங்கில் சிறப்பாக நிகழ்ந்தேறியுள்ளது. இவ்விழாவின் போது 2012ம் மற்றும் 2013ம் ஆண்டிற்கான விருதுகள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கலைஞர்களுக்கு வழங்கப்பட்டதுடன் "இன நல்லுறவிற்கான தமிழியல் விருதை'' சுனந்த தேசப்பிரிய பெற்றுக்கொண்டது சிறப்பாகும்.

## கொலையுண்டவரின்...

செய்ய சர்வதேசக் காவல்துறையின் உதவியை இலங்கைக் காவல்துறை நாடியிருந்தது .

அவரைத் தேடுவதற்கான காரணமாக சர்வதேசக் காவல்துறை தனது வலைப்பக்கத்தில் "கொலை" என்றே குறிப்பிட்டுள்ளது.

## துட்டகைமுனுவிடம் ....

மாவீரர் துணிலும் இல்லங்கள் தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சைகளின் பின்னணியிலே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

துட்டகைமுனு தன்னுடன் போரிட்டு வீரமரணம் அடைந்த மன்னன் எல்லாளனின் சமாதிக்கு அனைவழும் வணக்கம் செலுத்தி விட்டுப் போக வேண்டும் எனக் கட்டளை இட்டிருந்ததை நினைவு கூர்ந்த ஜனா அந்தவகையில் அம்மனனனுக்கு இருந்த மனிதாபிமானம் கூட மகிந்தவின் அரசிற்கு இல்லை எனத் தெரிவித்தார். போரின் பின்னர் இறந்த தமது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்துவதற்கு சனனாயக அரசு என்ற அடிப்படையில் இவ் அரசு அனுமதி அளிக்குமா என்பது சந்தேகமே என அவர் தெரிவித்துள்ளார்.

## நான் ஒரு போதும் ஊர்த் துவேசத்தைத் தூண்டமாட்டேன் - நிசாம் காரியப்பர்

முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தீர்மானத்தின் பிரகாரம் கல்முனை மாநகர மேயர் பதவியை பொறுப்பேற்க நான் தயாராக இருக்கிறேன் என அக்கட்சியின் பிரதிச் செயலாளர் நாயகமும் கல்முனை மாநகர பிரதி மேயருமான சட்டத்தரணி நிசாம் காரியப்பர் தெரிவித்தார்.

எமது கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீமிடம், தான் மேயர் பதவியை ராஜினாமா செய்ய தயாராகவுள்ளேன் என்று அவர் கூறியதாக நான் அறிகிறேன். அவ்வாறே அவர் நடந்து கொள்வார் என்று நாம் எதிர்பார்க்கிறோம். இப்பதவிக்காக நான் ஒருபோதும் ஊர்த் துவேஷத்தை தூண்ட மாட்டேன். அப்படி பிரதேச



வாதத்தை தூண்டி விட்டு மக்களை பிரித்து இந்த மேயர் பதவியை பெற வேண்டும் என்கின்ற தேவை எனக்கு கிடையாது.

ஏற்கனவே உள்ள சுழற்சிமுறை உடன்பாட்டின் பிரகாரம் கல்முனை மாநகர மேயர் பதவியை சிறாஸ் மீராசாஹிப் ராஜினாமா செய்வார் என நான் நம்புகிறேன் என்றும் நிசாம் காரியப்பர் மேலும் தெரிவித்தார்.

## ஓட்டமாவடியில் தூபி

ஓட்டமாவடி பிரதேசத்தில் இருந்து நாட்டிற்காக உயிர்த் தியாகம் செய்தவர்களின் நினைவாக தூபி அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த தீர்மானம் ஓட்டமாவடி பிரதேச சபையினால் மேற்கொள்ளப் பட்டுள்ளது. ஓட்டமாவடி பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது நினைவுத் தூபி அமைத்தல் தொடர்பில் பிரதித் தவிசாளர் ஏ.எம்.நௌபரினால் பிரேரணையொன்று சமர்பிக்கப்பட்டது.

## 8 வயதுச் சிறுவனைப் பாம்பு தீண்டியது

திருகோணமலை, பெரியவிளான்குளப் பகுதியில் 8 வயதுச் சிறுவன் ஒருவனைப் பாம்பு தீண்டியுள்ளது. வீதியில் சென்றுகொண்டிருந்த ஆதிக் என்ற அச் சிறுவன் தெருவோரத்தில் கிடந்த சீமெந்துப் பையொன்றைக் கண்டுள்ளான். அதனைக் கையில் எடுத்து விளையாட முற்பட்ட போது அப் பை பாரமாயிருப்பதை உணர்ந்த அச் சிறுவன் தனது கையைப் பைக்குள் விட்டுத் துளாவ முற்பட்ட போதே அப் பையினுள் இருந்த பாம்பு கடித்துள்ளது.

அதனைத் தொடர்ந்து அலறிய சிறுவனை உடனடியாக பெரிய விளாங்குளக் கிராமிய வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்று அனுமதித்துள்ளனர். மேலதிகச் சிகிச்சைகளுக்காகச் சிறுவன் திருகோணமலைப் பொதுவைத்தியகாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

"மேலும் பிரதி அமைச்சர்கள் நியமனம்"




News and Views

செய்தியும் பார்வையும்

## இரு முறை மட்டும் சரியான நேரம் காட்டும் அதிசய மணிக்கூடு

திருகோணமலை நகரின் மத்தியில் மிக எடுப்பாக எழுந்து நிற்கும் மணிகூட்டு கோபுரத்தின் பயனைப் பெற எவரும் நிமிர்ந்து கூட பார்ப்பதில்லை. சரியான நேரத்தை அது பிழையாக காட்டுவதே அதற்கு காரணம்.

ஆனால் அதன் கம்பீர தோற்றத்தை, தகரத்தில் அமைத்து பறக்க விடப்பட்டுள்ள தேசியக் கொடி மாத்திரமே மெருகூட்டுகிறது. சில வேளை அந்த கொடிக்காக நிர்மாணிக்கப்பட்ட கோபுரமா? என நினைக்கத் தோன்றுகின்றது.

''திருகோணமலையில் உங்களால் ஒரு தேசியக் கொடியைத்தானும் பறக்க விட முடியுமா?" என அன்றைய எதிரக்கட்சி, ஆளும் கட்சியைப் பார்த்துக் கேட்டது. அவ்வாறு கேட்டது வேறு கொடிகளை அங்க பறக்க விடுவதை தடுக்கும் உபாயமாக அன்று இருந்ததையும் குறிப்பிட வேண்டும்.



குறித்த கொடி துணியில் தயாரிக்கப்பட்டால் அடிக்கடி அதனை மாற்ற வேண்டும் அத்துடன் அது கிழிந்து கந்தலாக பறப்பதும் அழகல்ல என்பதால் ஒரு நிரந்தர நடவடிக்கை அன்றைய பேரினவாத அரசியல்வாதிகளால் எடுக்கப் பட்டது. குறித்த கோபுரத்தில் கொடியேற்றப் போய் அங்கு நின்ற அப்பாவித் தமிழ் ஒருவரின் உயிர் துப்பாக்கிக் குண்டுக்கு இரையானதையும் மறந்துவிட முடியாது.

அப்படிப்பட்ட அரசியல் வரலாற்றை கொண்ட மணிக்கூட்டுக் கோபுரத்தில் பொருத்தப் பட்டுள்ள நேரம்காட்டி தவறாக மக்களுக்கு நேரத்தை காட்டுவதை அனுமதிக்க முடியாது.

கோபுரத்திற்கு உரித்துடையோர் உரிமையுடன் இதை சீர்செய்ய முன்வர வேண்டுமென்பதே மக்களின் எதிர்பார்ப்பு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்கில் கிழக்கு இணைப்பு: நடைமுறை சாத்தியமா

வடக்கு மாகாணசபைக்கு நடந்த தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்றதை அடுத்து, வடக்கு - கிழக்கு மாகாணங்களின் இணைப்புத் தொடர்பான விவகாரம் அரசியல் அரங்கில், மீண்டும் முன்னிலைக்கு வந்து ள்ளது.

வடக்கு மாகாணசபைத் தேர்தலுக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளியிட்ட தேர்தல் அறிக்கையில், வடக்கு - கிழக்கு இணைந்த சுயாட்சி நிர்வாக அமைப்பு ஒன்றையே இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வாக முன்வைத்திருந்தது.

உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான இந்த தீர்வுத் திட்டத்தை, இலங்கை அரசாங்கம் எப்போதோ நிராகரித்து விட்டது. அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு மாகாணசபையைக் கைப்பற்றி யதும், வடக்கையும் கிழக்கையும் இணைத்து தனி ஈழத்தை அமைக்கப் போகிறார்கள் என்று சிங்களத் தேசியவாத சக்திகள் குரல் எழுப்பத் தொடங்கி விட்டன.

வடக்கும், கிழக்கும் இணைந்த தீர்வை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தினாலும், வடக்கு-கிழக்கு இணைப்புக்கான எந்த முயற்சிகளும் முன்னெடுக்க ப்படாத போதிலும், சிங்களத் தேசியவாத சக்திகள் இதனை ஒரு பெரிய அச்சுறுத்தலாக வெளிப்படுத்தத் தொடங்கி விட்டனர்.

வடக்கு-கிழக்கு இணைப்பு என்பது, முக்கியமாக கிழக்கு மாகாண மக்களின் விருப்பத்தில் தான் தங்கியுள்ளது. மூன்று இன மக்களும் கிட்டத்தட்ட சமஅளவில் வாழுகின்ற கிழக்கு மாகாணத்தில், வடக்குடன் இணைந்து கொள்வதற் கான சம்மதத்தைப் பெற்றுக் கொள்வது ஒன்றும் இலகுவான காரியமல்ல.

ஏனென்றால், கிழக்கில் வாழும் சிங்கள மக்கள் ஒருபோதும் இதற்கு ஆதரவு தெரிவிக்கப் போவதில்லை. இதனால், வடக்கு-கிழக்கு இணைப்பில், முக்கியமான பங்கை வகிக்கப் போகிறவர்கள் முஸ்லிம் மக்களாகவே இருக்கப் போகின்றனர்.

கிழக்கில் முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும் இடையில் இன்னும் முழுமையான நல்லுறவு ஏற்பட்டு விட்டதாக கருத முடியாது. அங்கு பல இடங்களில் இந்த இரு இனங்களுக்கு இடையிலும் இனரீதியான சச்சரவுகள் நீடிக்கின்ற நிலையில், வடக்குடன் இணைந்து கொள்வதற்கு முஸ்லிம்கள் அவ்வளவு இலகுவாக சம்மதிக்கமாட்டார்கள்.

வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டால், முஸ்லிம்களுக்கென தனியான நிர்வாக அலகு அதாவது தென்கிழக்கு மாகாணம் உருவாக்கப்பட வேண்டும் என்பதை, அஷ்ரப் காலத்திலேயே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வலியுறுத்தியது.

இப்போது, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், முஸ்லிம்களுக்கு தனி அலகு கோரிக்கை எதையும் முன்வைப்பதில்லை. அதற்கான எந்த அரசியல் பேரத்திலும் ஈடுபடவும்



இல்லை.

வடக்குடன் கிழக்கை இணைப்பதற்கான முயற்சிகள் என்பது, இன்னமும் பூச்சிய நிலையில் இருக்கிறது என்பது தான் உண்மை.

வடக்கு - கிழக்கை இணைப்பதற்கு தமிழர் தரப்பு புரம் பேசத்தக்களவுக்கு பலமான நிலையில் இருந்திருந்தால் அல்லது 1987ஆம் ஆண்டு நிலைப்பாட்டில் இந்தியா இருந்திருந்தால், அரசியல் ரீதியாக இத்தகைய இணைப்பு முயற்சிகளை முன்னெடுத்திருக்க வாய்ப்புகள் உள்ளன.

ஆனால், தமிழர் தரப்பு இப்போது பேரம் பேசும் பலமான நிலையில் இல்லாததால், இந்தியாவும் வடக்கு - கிழக்கு இணைப்பு விவகாரத்தில் அக்கறை காட்டா ததால், இப்போதைக்கு வடக்கு - கிழக்கு இணைப்பு என்பது தமிழர்களின் ஒரு கனவாக மட்டுமே இருக்க முடியும்.

கிழக்கு மாகாணம் வடக்குடன் இணைய விரும்பினால், வடக்கு மாகாணமும் அதற்கு இணங்கினால், வடக்கு - கிழக்கு இணைப்பை அரசாங்கத்தினால் தடுக்க முடியாது என்று வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ் வரன் கூறியிருந்தார்.

ஆனால், அப்படி வடக்கு - கிழக்கை இணைக்க முடியாது என்றும், அரசியலமைப்புக்கு முரணாக எதையும் செய்ய முடியாது என்றும் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்திருந்தார்.எனினும், வடக்கு-கிழக்கு மாகாணங்கள் இணைய விரும் பினால் அதை தடுக்க முடியாது என்று மீண்டும் பதில் கொடுத் துள்ளார் முதலமைச்சர் விக்னே ஸ்வரன்.

இந்த வாதப் பிரதிவாதங்கள் அதிகார, அரசியல் மட்டங்களில் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. ஆனால், நடைமுறையில் எந்த செயலாக்க முயற்சிகளும் நடக்கவில்லை.அதேவேளை, வடக்கு-கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்ட முறை தவறு என்பதால் தான், அவற்றைப் பிரிக்க உயர்நீதிமன்றம் உத்தரவிட்டதே தவிர, வடக்கையும் கிழக்கையும் இணைக்க முடியாது என்று கூறவில்லை.

ஆனால், அத்தகைய இணைப்புகளை சாத்தியமற் றதாக்கும் நோக்கில், அரசியலமை ப்பில் இரண்டு திருத்தங்களைச் செய்வதற்கு அண்மையில் அரசாங்கம் எடுத்திருந்த இரண்டு நடவடிக்கைகள், 'இந்தியாவின் தலையீட்டினால் இடை நிறுத்தப்பட் டுள்ளன.

இந்தச் சூழலில், வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் அரசியல் ரீதியான, சட்டரீதியான நடைமுறைகள் எதையும் உடன டியாக முன்னெடுக்கும் சாத்தி யங்கள் இருப்பதாகத் தெரிய வில்லை.

ஆனால், கிழக்கில் உள்ள முஸ்லிம்கள் இதற்கு சாதகமான தீர்ப்பை அளிக்க முன்வந்தால் மட்டுமே, இந்த இணைப்பு சாத்தியமாகும்.

இரண்டு மாகாணசபைகளும் இணைந்து கொள்வதற்கு இணங்கினாலும், அரசியல் ரீதியாக அந்த முயற்சியை, சட்ட வலுவுள்ளதாக்குவதற்கு, கருத்துக்கணிப்பு அவசியம் தேவைப்படும்.

இதனை ஒரு தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விவகாரமாக கருதி, தனக்குள்ள நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டு, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ, கருத்துக்கணிப்புக்கு உத்தர விடுவார்.

ஆனால், இப்போதைய நிலையில் அத்தகைய கருத்துக கணிப்பில் கிழக்கிலுள்ள முஸ்லிம்கள் அதற்கு ஆதரவளிப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. அதற்கான அரசியல் சூழலில் அங்கு கிடையவே கிடையாது. நம்பகத்தன்மையை விட, நம்பிக்கையீனம் தான் அதிகமாக உள்ளது.

ஆனால், வடக்கும் கிழக்கும் இணைந்தால், கூடுதலான அரசியல் உரிமைகளை பெற்றுக் கொள்ளலாம், அதற்கான வாய்ப்பு கள் கிடைக்கும் என்பதை உறுதிப்ப டுத்தினால் தான், முஸ்லிம்களும் முஸ்லிம் அரசியல் கட்சிகளும் அதற்குச் சாதகமான நிலைக்குத் திரும்பும்.

இப்போதைக்கு அரசாங்கத்துடன் அண்டி நடந்து கொள்வதே அனுகூலம் அடைவதற்கான ஒரே வழியாக முஸ்லிம் அரசியல் தலைமைகள் கருதுகின்றன. அதனால் தான், கிழக்கு மாகாணசபையில் முரண்பாடு களுக்கு மத்தியிலும் அரசாங் கத்துடன் இணைந்து செயற்பட நினைக்கின்றன.

இத்தகைய சூழலில், வடக்கு மாகாண சபையின் செயற்பாட்டில் தான் கிழக்கிலுள்ள முஸ்லிம் தலைமைகளை வடக்கு -கிழக்கு இணைப்புக்கு சார்பான நிலைக்குத் கொண்டு வரமுடியும்.

அரசாங்கத்துடன் இணைந்து ஆட்சியமைத்துள்ளதால், கிழக்கு மாகாணசபையின் முக்கியத்துவம் குறைந்து, அந்த நிர்வாக அமைப்பு பெரியதாக செயல்முறையற்றதாக மாறியுள்ளது.

ஆனால், வடக்கு மாகாண சபையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றினாலும், அதற்கு அரசாங்கம் முக்கியத்துவம் கொடுப்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. அதேவேளை, சர்வதேச அளவிலும் வடக்கு மாகாணசபைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

இந்த தளத்தைக் கட்டியெழுப்பி, வலுவானதா க்குவதன் மூலம், கிழக்கிலுள்ள முஸ்லிம் மக்களும், அரசியல் தலைமைகளும், வடக்குடன் இணைவதால் கூடுதல், நன்மை களை அடைய முடியும் என்ற நம்பிக்கையை உருவாக்க முடியும்.

அதுமட்டுமன்றி வடக்கி லுள்ள முஸ்லிம்களுடன் நல்லுறவை ஏற்படுத்தி, அவர்களையும் பங்காளர்களாக்குவதன் மூலமே கிழக்கில் அத்தகைய மாற்றத்தை ஏற்படுத்த முடியும். வடக்கு- கிழக்கு இணைப்பு என்பது ஒரே இரவில் நிகழ்ந்து விடக்கூட அதிசயமாக இருக்க முடியாது.

அதுவும், இனப்பிரச்சினைக்கான தீர்வு போன்ற நீண்டகால இலக்காகவே இருக்கும்.

இந்திய - இலங்கை உடன்பாட்டின் மூலம் தற்காலிகமாக இணைக்கப்பட்டிருந்த வடக்கு- கிழக்கு மாகாணங்களை, சிங்களத் தேசியவாதிகள் நன்கு திட்டமிட்டே பிரித்தனர்.

அப்படியிருக்கும் போது, அவற்றை மீள் இணைக்கும் முயற்சிகளை மேற்கொள்ளும் போது, கூடுதல் கவனம் செலுத்த வேண்டியிருக்கும்.

இந்த நீண்ட இலக்கை அடைவதற்கு வடக்கு மாகாண சபையே கூடுதல் முயற்சிகளை முன்னெடுக்க வேண்டியிருக்கும்.

அந்த செயல்முறையை நோக்கி வடக்கு மாகாணசபையை நகர்த்துவதே இப்போது தமிழ்கட்சிகளினது முக்கியமான தேவைப்பாடாக இருக்கும்.



கே. சஞ்சயன்

(நன்றி தமிழ்மிரர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எத்தனை காலம் தான் ஏமாற்றுவார்......?

வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் (சி.வி) சிறிலங்கா அதிபர் மகிந்த ராஜபக்சவின் முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டதன் மூலம் தமிழ் மக்களின் அதிருப்பதியை தேடிக்கொண்டார். இந்நிகழ்வை தமிழ் அரசியலில் ஏற்பட்ட சுனாமிப் பேரவலம் என தமிழ் அரசியலில் மிகுந்த ஈடுபாடுடைய செயற்பாட்டாளர் ஒருவர் தெரிவித்தார். இனப்படுகொலையாளன் என தமிழ்த்தரப்பால் அழைக்கப்படும் மகிந்த இராஜபக்சவினை ஏற்றுக்கொண்டு அவருக்கு மதிப்பளிக்க தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு அரசியல் கட்சி முன்வந்தமை தமிழ்த் தேசிய அரசியலில் பின்னடைவினை ஏற்படுத்தியுள்ளது என்பதனை கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் ஏற்றுக் கொண்டுள்ளதாகத் தெரியவில்லை. குறிப்பாக குறியீட்டு அரசியலின் (symbolic politics) அடிப்படையில் பார்த்தால், சிறுபான்மையினரான தமிழர்கள், பெரும்பான்மையினாரன சிங்களவர்களின் மேலாண்மையை ஏற்றுக் கொள்வதனை வெளிப்படையாக அறிவிக்கும் நிகழ்வாகவே இதனைப் பார்க்க முடியும். தவிரவும், திட்டமிட்ட இந்நகர்வின் மூலம் தமிழ்த் தேசிய அரசியலில், இனப்படுகொலை, சுயநிர்ணய உரிமை போன்ற சொற்கள் வலுவிழந்தவையாக ஆக்கப்பட்டுள்ளன.

இவ் விடயத்தில் தமிழ் மிதவாதிகளிடமிருந்தும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தீவிர ஆதரவாளர்களிடமிருந்தும் வரும் கருத்துகளையும் நாம் கிரகிக்க வேண்டியுள்ளது. இக்கருத்துகள் இரண்டு வகையானவை. ஒரு சாரார், மாகாண சபை (மா.ச) முதலமைச்சர்கள் ஜனாதிபதியின் முன் பதவிப் பிரமாணம் எடுக்க வேண்டிய அவசியம் இல்லை எனினும், இந்நடைமுறை வழமையாக்கப் பட்டுள்ளதால், அதனையே சி.வி. பின்பற்றியிருக்கிறார் என வாதிடுகிறார்கள். அவ்வாறான நடைமுறையை பின்பற்றபடாதவிடத்து, மா.ச. கலைக்கப்படும் நிலை ஏற்பட்டுவிடும் என அவர்கள் அச்சப்படுகிறார்கள். அதாவது நிர்ப்பந்தத்தின் அடிப்படையில், தவிர்க்கமுடியாத நிலையில், வேறு வழியின்றி கூட்டமைப்பு இவ்வாறு நடந்துகொள்வதாக அவர்கள் இந் நடவடிக்கையை நியாயப் படுத்து கிறார்கள்.

இன்னொரு சாராரோ சர்வதேச நாடுகளின் இராசதந்திரிகளின் ஆலோசனைக்கு அமையவே இந்த முடிவு எடுக்கப்பட்டதனால் இதனை ஒரு இராச தந்திர நகர்வு என ஆறுதலடைகிறார்கள். அத்துடன் நின்று விடாது சர்வதேசம் இப்போது எங்கள் பக்கம் இருப்பதால் இது தொலை நோக்கில் பல சாதகமான விளைவுகளைக் கொண்டுவரும் என எதிர்பார்க்கிறார்கள்.

பதவிப்பிரமாண நிகழ்வில் சி.வி. தனது முழுக் குடும்பத்துடன், திருமணவழி சம்பந்திகள் சமேதம் வந்து சிறப்பித்ததன் மூலம், முதலாவது கருத்திற்கு விளக்கம் சொல்வதற்கு அவசியமில்லாமல் செய்து விட்டார். இரண்டாவது இது மேற்குலக த்தின் இலங்கைத் தீவுதொடர்பான அணுகுமுறையுடன் தொடர்புடையது என்பதனால் இவ்விடயத்தில் மாத்திரம் இக்கட்டுரை கவனம் செலுத்தியுள்ளது.

சிறிலங்கா அரசாங்கம் மீதான நல்லெண்ணத்தை வெளிப்படுத்துவதன் மூலம் சிங்கள மக்கள் மத்தியில் தமிழர்கள் பற்றிய சந்தேகங்களை அகற்றிக் கொள்ள முடியும் எனவும், அதற்கு இப்பதவியேற்பு வைபவத்தினை வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்ளுமாறும், கொழும்பில் உள்ள இந்திய, அமெரிக்க இராஜதந்திரிகள் தமக்கு அறிவுறுத்தியதாக கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கூறியதாக புளொட் அமைப்பின் தலைவர் சித்தார்த்தன் பி.பி.சி தமிழ்ச்சேவைக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்திருந்தார். சித்தார்த்தனின் தகவல் இரகசியமான ஒன்றல்ல. ஏனெனில் புலம்பெயர் தமிழ் அமைப்புகளுடனான சந்திப்புகளில், மேற்குலக சிந்தனை மையங்களின் பிரதிநிதிகளும், இராஜதந்திரிகளும் இதனையே தொடர்ச்சியாகத் வலியுறுத்தி வருகிறார்கள். சர்வதேச முரண்பாடுகளுக்கான மையத்தின் அண்மைய அறிக்கையிலும் இது தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இவ்விடத்தில் இளம் கல்வியாளர் ஒருவர் சமூகவலைத்தளம் ஒன்றில் எழுப்பிய கேள்வியினை அதன் பொருத்தப்பாடுகருதி இங்கு குறிப்பிடுகிறேன். திரு. சம்பந்தன் சிங்கக் கொடியை பிடித்தார், சி.வி. மகிந்தவின் முன் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இவர்கள் ஐக்கிய இலங்கைக்குள் ஒரு தீர்வை வேண்டுகிறார்கள் என்பதனை உறுதிப்படுத்த இன்னும் வேறென்னவெல்லாம் செய்ய



வேண்டும்? சி.வி. குறிப்பிடுவதுபோன்று (சிங்கள மக்கள் மத்தியிலுள்ள) ஐயப்பாட்டையும் தவறான விளக்கத்தினையும் அகற்றுவதற்கு இன்னும் எவ்வளவு காலம் இதனைச் செய்ய வேண்டும் இவ்வாறு அவரது கேள்வி இருந்தது. இவ்வருட முற்பகுதியில் பிரித்தானிய பாராளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற உலகத்தமிழர் பேரவையின் மாநாட்டில்,சம்பந்தன், சுமந்திரன் ஆகியோர் முன்னிலையில் எரிக் சொல்கெய்ம் ஐ நோக்கி இவ்வாறான ஒரு கேள்வியை இக்கட்டுரையாளர் கேட்டிருந்தார். ஆனால் அதற்கான பதில் சரியாக வழங்கப்படவில்லை.

இலங்கைத் தீவில் பேணத்தக்க வகையிலான அமைதியை ஏற்படுத்து வதற்கு இனங்களுக்குஇடையில் நல்லிணக்கம் நிலவ வேண்டும் என்ற ஒற்றை இலக்கை நோக்கியே மேற்குலகமும், இந்தியாவும் தமது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. இதற்கு குந்தகம் விளை விக்கக்கூடியவை எனக் கருதும் எச்செயலினையும் அவர்கள் ஊக்கப்படுத்துவதில்லை. இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கம் என்பது ஒன்றும் தகாதவார்த்தைகள் கிடையாது என்பதனை ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் அது உலக நீதியின் பாற்பட்டு இனங்களுக்கான தனித்துவம் பேணப்படும் வகையில் அமையுமா, நெருக்குவாரத்தின் அடிப்படையில் ஏற்பட்ட இணைப்பாடாக என்பது தான் இங்குள்ள பிரச்சனை. வெளித்தரப்பிரைப் பொறுத்தவரை சம்பந்தப்பட்ட தரப்புகளின் மீதுஅழுத்தங்களைப் பாவித்து, அல்லது அவர்களைஏமாற்றி நல்லிணக்கத்தை ஏற்படுத்த முயல்கின்றன. ஆதலால் அவர்கள் பரிந்துரைக்கும் தீர்வு நீதியின் பாற்பட்டதாக அமைய வேண்டும் என்பது அவசியமில்லை.

மேற்குலக சிந்தனை மையங்கள் குறிப்பிடுவதிலிருந்து பார்த்தால், இப்போதைக்கு, தமிழர்கள் தங்களிடம் ஒரு சுயாட்சி அலகு இருப்பதாக உணரவேண்டும் என அவர்கள் எதிர்பார்ப்பது தெரிகிறது.இருப்பதை வைத்து முன்னேறுதல் என்ற அடிப்படையில் கோறையான ஒரு அதிகாரப்பரவலாக்க அலகினை தமிழர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதே அவர்கள் தமிழர்களுக்கு வழங்கும் ஆலோசனை அல்லது கட்டளை. இவ்வாறான கோறையான சுயாட்சி அலகானது சிறிலங்காவின் ஒற்றையாட்சிக்குள் அமைந்துள்ளது அல்லது தங்களின் மேலாண்மைக் குட்பட்டது என்பதனை சிங்களத் தரப்பு நம்பவேண்டும் என்றும், மற்றைய சிறுபான்மை இனங்கள் தங்களுக்கும் இவ் விடயங்களில் வகிபாகம் இருப்பதாக உணர வேண்டும் என்றும் எதிர்பார்க் கிறார்கள். எத்தகைய தீர்வு முயற்சியும் சிங்கள மக்களுக்கு ஏற்புடையதாக இருக்கவேண்டும் எனக்குறிப்பிடுவதன் விளக்கம் இதுதான்.

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பதவியேற்கும் முடிவு சார்பான புலம்பெயர் பார்வை .. நன்றி கோபி .. ஒரு பேப்பர்

கூட்டமைப்பைப் பொறுத்தவரை, அது முற்று முழுதாகவே வெளித்தரப்பின் இழுப்பிற்கு ஏற்ப செயற்படத்தயாராக இருக்கிறது. அதனிடம் வேறெந்தத் தெரிவுகளும் இல்லை என்பது வேறுவிடயம். பொதுவில் வெளித்தரப்பு கீறும் வட்டத்திற்குள் நின்று செயற்படும் கூட்டமைப்பு தேர்தல் காலங்களில் மாத்திரம் விதிவிலக்காக சுயநிர்ணய உரிமை, இறைமை, தனித்துமான தேசியம் போன்ற சொல்லாடல்களை பயன் படுத்துகிறது. பிரச்சார மேடைகளில் அதி தீவிர தேசியவாதம் பேசுகிறது. வாக்கு வங்கியினை திருப்திப்படுத்த மேற்கொள்ளப்படும் இப்பிரச்சாரங்களை சம்பந்தப்பட்டவர்கள் சகிப்புடன் ஏற்றுக்கொள்கிறார்கள்.

கூட்டமைப்பினரைப்போல், சிறிலங்கா அரசாங்கத்தினால் வெளித்தரப்பின் நெறிப்படுத்தலுக்கு முழுவதுமாக இணங்க முடியாவிட்டாலும், தன்னால் முடிந்தவரை ஒத்துழைத்து வருகிறது. ஆனால் சிங்கள பௌத்த பேரினவாத வாக்கு வங்கியை நம்பியிருக்கும் சிறிலங்கா அரசாங்கம் எப்போதுமே இவ்வாறு நடந்து கொள்ள முடியாது முரண்படும் நிலை ஏற்படலாம். அந்நிலையில் வெளித்தரப்பினர் தங்கள் பக்க நியாயங்களை புரிந்து கொண்டு தங்களது சமஸ்டிக் கோரிக்கையை சாதகமாக அணுகி, தமக்கு உதவுவர் எனக்கூட்டமைப்பும் அதன் நீட்சியாகச் செயற்படும் சில புலம்பெயர் அமைப்புகளும் முழுமையாக நம்புகின்றன. சுருக்கமாகச் சொன்னால் இதுதான் இவர்களிடம் உள்ள ஒரேயொரு மூலோபாயம். இறுதியாக மட்டக்களப்பில் நடைபெற்ற தமிழரசுக்கட்சியின் மாநாட்டில் சம்பந்தன் இதனை வெளிப்படையாகவே குறிப்பிட்டார். தாங்கள் இரகசியமாகப் பேணிவந்த மூலோபாயம் பற்றிய விபரங்களைத் தங்களது தலைவர் போட்டுடைத்துவிட்டார் என கூட்டமைப்பின் புலம்பெயர் ஆதரவாயளர்கள் குறைப்பட்டுக் கொண்டனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆனால் மேற்படி மூலோபாயத்தை நன்கு அறிந்து வைத்துள்ள சிறிலங்கா ஆட்சிமையம் தனது இராஜதந்திர வலிமையை பாவித்து அதனை முறியடிக்கும் என எதிர்பார்க் கலாம். அவ்வாறான நிலையில், தமிழ் மக்கள் எவ்வித அதிகாரமுமற்ற பதின்மூன்று மைனஸ் ஏற்று அதனுடன் வாழப்பழகிக் கொள்ள வேண்டும்.

---

அது ஒரு வறிய குடும்பம் திட்ட மிடலும், போதிய கல்வி அறிவும், அக் குடும்பத்தில் அறவே இல்லாததால் வறுமை நிரந்தரமாக அங்கு குடி கொண்டு விட்டது. அப் பிரதேசத்தில் பல குடும்பங்கள் பொருளாதாரத்தில் முன்னோக்கிச் சென்றாலும் அந்தக் குடும்பம் மாத்திரமே இன்னும் தவழும் நிலையில் உள்ளது.

பகட்டாக வாழ வேண்டும் தம்மை மற்றவர்கள் புகழ வேண்டும். உயர்வாக கருத வேண்டும் எனும் அற்ப ஆசையின் நிமித்தம் தம்மை தாமே குட்டிச் சுவராக்கிக் கொண்டவர்கள் அவர்கள்.

தத்தம் விருப்பத்தின் பேரில் வாழ்க்கைத் துணைகளை தாமே தேர்ந் தெடுத்து பெற்றோரை விட்டு விலகிச் சென்றாலும், உண்டு உறங்குவதற்கு கூட ஒரு தகுந்த இடம் அவர்களுக்கு இல்லை அவர்களின் பெற்றோர்களுக்குக் கூடசொந்தமாக இருப்பதில்லை.

அரச திணைகளமொன்றிற்கு உரித்தான ஒதுக்கீட்டு காணியிலே பெற்றோர் இன்று வரை வாழ்ந்து வருகின் றனர். அந்த சிறு காணித் துண்டிலே சிறு சிறு குடிசைகளை அமைத்து அந்த குடும்பத்தில் திருமணமானவர்களும் வசித்து வருகின்றனர்.

ஓரளவு தானும் வசதியாக வாழ்வதற்கு ஒரு மனை வேண்டும். பொருள் பண்டம் சேகரிக்க வேண்டும். என்ற எண்ணம் அந்த பெற்றோரின் பிள்ளைகளுக்கு அறவே இல்லை பெற்றோரைப் போன்று வாழையடி வாழையாக கடன்பட்டு களங்கத்துடன் வாழ்வதையே அவர்கள் நோக்கமாக கொண்டு இருந்தனர்.

அப் பிரதேசத்தில் யாராவது சீட்டு போட்டால் அக் குடும்பத்தில் உள்ள அனைவரும் அதில் சேர்ந்து கொள்வார்கள். குறித்த சீட்டுப் பணத்தை ரொக்கமாக எடுக்கும் வரை சீட்டு தவணைப் பணத்தை கிரமமாக செலுத்தி வருவார்கள். குடும்பத்தில் அனைவரும் சீட்டுப் பணத்தை வரிசையாக பெற்றபின் செலுத்த வேண்டிய தவனைப் பணத்தை செலுத்தாது வழமையான ஏமாற்று வித்தையை சீட்டுக்காரருக்கு காட்ட ஆரம்பித்து விடுவார்கள்.

சீட்டு விடயத்தில் மாத்திரமல்ல ஏனைய கொடுக்கல் வாங்கல்களிலும் அவர்களிடம் நாணயத்தை எதிர்பார்க்க முடியாது. பொய்யும், புரட்டும் அவர்களின் இரட்டை குழந்தைகள் என்று கூறினால் அது தவறில்லை. அவை அனைத்தும் அவர்களின் பெற்றோர்களிடம் இருந்து கற்றுக் கொண்டவைகளே நாம் விதையைதான் அறுவடை செய்யலாம். விதைக்காதவையை என்றுமே அறுவடை செய்ய முடியாது.

பெற்றோர்களே பிள்ளைகளுக்கு முன் மாதிரி என கூறிவார்கள். ஆனால் அங்கு சமூகத்திற்கு உதாவதவைகளையே அப்பெற்றோர் கற்றுக் கொடுத்துள்ளனர். வாழையடி வாழையாக அக் குடும்பம் அந்த தீய பழக்கத்தை விதைத்துச் சென்றாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் பல வெளிநாட்டு நிறுவனங்கள் சகல கிராமங்களிலும் சுழற்சி முறையான கடன் வழங்கும் கருத்திட்டத்தினை ஆரம்பித்திருந்தன. சகல கிராமங்களிலும் அக் கருத்திட்டம் வெற்றியை அளித்திருந்தாலும் குறித்த குடும்ப அங்கத்தவர்களின் நேர்மையற்ற செயற்பாட்டினால் அது அங்கு தோல்வியை தழுவியது.

ஆனால் நிறுவனம் சட்டபூர்வமான நடவடிக்கையை அவருக்கு எதிராக எடுத்திருந்தது. குறித்த கடன் பணத்தை மீளச் செலுத்தாததால் அவரின் வீட்டினிலுள்ள பொருட்களை பறிமுதல் செய்ய தீர்மானிக்கப்பட்டது. எழுத்து மூல அறிவித்தல்களினால் காலஅவகாசமாக சட்டத்திற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்கள் வழங் பொருட்படுத்தாமல் இருந்துள்ளார்.

அன்று அக் குடும்பத்தாரினது வீட்டு வாசலில் ஒரே சனக் கூட்டமாக இருந்தது நிறுவன உத்தியோகத்தர்கள். பொலிசார் ஆகியோர் அங்கு நின்று கொண்டிருந்தனர்.

மேலும் பெரும் வாக்கு வாதம் அங்கு இடம் பெற்றுக் கொண்டி ருக்கையில் வெள்ளை நிற சீருடை அணிந்த இளம்பெண் உந்துருளியில் அவ்விடத்திற்கு வந்தார். அங்கு இடம் பெற்றுக் கொண்டிருந்த வாக்குவாதத்தின் காரணத்தை அவர் அறிந்து தனது கைப் பையில் இருந்த சில ரூபா நோட்டுக்களை அங்கு வந்திருந்த நிறுவன உத்தியோகத்த ரிடம் கொடுத்து பிரச்சனையை சுமூகமாக தீர்த்து வைத்தார்.

அவர் அவ்விடத்திற்கு வராமல் இருந்திருந்தால் சுழற்சி முறையில்

## ...நாட்டு நடப்பு...

கடனைப் பெற்று அதை திருப்பி செலுத்தாது ஏமாற்றியவரின் வீட்டுப் பொருட்கள் லொறியில் ஏற்றப்பட்டிருக்கும் நல்ல வேளை அந்த இளம் பெண்ணின் வருகையால் அவர் தப்பித்துக் கொண்டார். அவருக்காக பணத்தை கொடுத்தவர் வேறுயாருமல்ல. அரசினர் வைத்தியசாலையில் சிற்றூழியராக கடமையாற்றும் அவரின் இளைய சகோதரியே. அன்று அவரின் சம்பள நாளாகையால் அவரால் குடும்ப மானத்தைக் காப்பாற்ற முடிந்தது.

அது மாத்திரமல்ல ஏமாற்றுக்காரரான அந்தச் சகோதரியின் இன்னுமொரு வங்கிக் கடனுக்கு இளைய சகோதரி சாட்சிக்கு ஒப்பமிட்டிருந்தார். அந்தத் தொகையும் அவரது சம்பளப் பட்டியலில் கழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

- துட்டகைமுனு-

## பிரிந்திணைந்த நட்பு

மதிய உணவு வேளையில் போது வேணுஷா, கூறிய வார்த்தைகளால் குழம்பியிருக்கிறாள் ரதி உளவியுலில் நிபுணத்துவம் பெற்றவளாக இருந்தும் வேணுஷாவின் வார்த்தைகளின் அர்த்தங்களை ரதியால் புரிந்து கொள்ள முடியவில்லை. எந்த நண்பியை அழைத்து வருவதாக கூறினாள்? தரம் 11 வரை கல்வி கற்றவளா? யாரது? ரதியால் கண்டுபிடிக்க முடியவில்லை எனினும் வேணுவின் வார்த்தைகளுக்கு இணங்க எல்லாவற்றையும் ஆயத்தம் செய்து வைத்து விட்டு கதிரையில் சாய்கிறாள். அப்போது பிரிந்த நண்பி றகீமா பற்றிய நினைவலைகள் பூவை சூழும் வண்டுகளாக ரதி மனதில்..........'மெல்லிய உடல், ஓரளவு நிறம், இரு பின்னல், முகத்தில் குறும் சிரிப்பு என தோற்றம் அளிப்பவள் றகீமா ரதியுடன் தரம் ஒன்றில் இருந்து கல்வி கற்றவள். இவர்கள் இருவருக்கும் இடையே ஏற்படும் சண்டைகளை தீர்ப்பவள் வேணுஷா. இவர்களை போன்றே இவர்கள் பாடசாலை காலமும் இனித்தது.

றகீமா பற்றிய அழகிய நினைவுகள் வந்து கொண்டிருக்கும் போது சிறிய சண்டையால் உண்டான பெரிய மனஸ்தாபத்தால் ஏற்பட்ட பிரிவும் நினைவுக்கு வந்தது.

றகீமா தன் வகுப்பு மாணவர்களுடன் நட்பாயிருப்பதை விட அடுத்த வகுப்பு மாதவியுடன் நட்பாயிருப்பது அதிகம். மாதவி, றகீமா தன்னை விட அதிக புள்ளிகளை பெற்று விட்டாலோ அல்லது ஏதாவது போட்டிக்கு தெரிவு செய்ய பட்டுவிட்டாலோ மனதில் அதை வைத்த கொண்டு ஏதாவது காரணம் சொல்லி சண்டை பிடிப்பாள். நட்பை முறிப்பாள். இதனால் மனம் நொந்து போவாள் றகீமா. அப்போது தரம் 10க்கான விஞ்ஞான வினாவிடை போட்டி நடைபெற்று முடிந்தது.

றகீமா தன் வகுப்பு நண்பர்களிடம் நான் வினாவிடை போட்டியில் மாதவியை விட அதிக புள்ளி பெற்று தெரிவு செய்யபட்டதை கூறவேண்டாம் என்றாள். ஆனால் குறும்புக்கார ரதி இவற்றை விளையாட்டாக எடுத்து மாதவியிடம், றகீமா தெரிவு செய்யபட்டதை கூறிவிட்டாள்.

இதனால் மாதவிக்கும் றகீமாவும் இடையே சண்டை முற்றி பிரிவு ஏற்பட்டது. இதனால் றகீமா ரதியை நன்றாக திட்டி விட்டாள். தன் தவறை உணர்ந்த ரதி றகீமாவிடம் மன்னிப்பு கூறவே றகீமா அலட்சியமாக மேலும் ரதியை காயப்படுத்தி விட்டாள். அன்றிலிருந்து றகீமா ரதியுடன் பேசுவதில்லை இப்படி இருக்கையில் அதிபரால் அறிவிக்கப்பட்டதன் பிரகாரம் தரம் 10 மாணவர்கள் கண்காட்சி ஒன்றை பார்வையிட அழைத்து செல்லப்பட்டனர். அங்கு றகீமாவுக்கும் ரதிக்கும் இடையே வாக்குவாதம் முற்றவே முறிந்த கண்ணாடி கோல் போல் நட்பு முறிந்தது. பசுமை தோட்டமாக இருந்த நட்பு வரண்ட பாலைவனமாகியது.

ஒரே வகுப்பில் இருந்தும் றகீமா ரதியுடனோ, ரதி றகீமாவுடனே பேசுவதில்லை. காலம் உருண்டோடியது. இருவரும் க.பொ.த சாதாரண தரம் 9A பெற்று விசேட சித்தி எய்தினர். இனிமேலும். றகீமாவுடன் பேசாமல் இருப்பது தவறு என்று உணர்ந்த ரதி அவளுடன் சமாதானமாவதற்கு சென்ற போது ஒரு அதிர்ச்சி காத்திருந்தது ரதிக்கு. அது தான் றகீமா அவ்வூரை விட்டே சென்றது. வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியது போலிருந்தது ரதிக்கு நண்பியை இழந்தோமே என தவித்தாள். வேதனையால் துடித்தாள் ரதி. றகீமாவை பல இடங்களில் தேடினால். தொடர்பை மேற்கொள்ள முயற்சித்தாள் ரதி. முடியவில்லை. அவளை பற்றி எந்தவித தகவல்களையும் ரதியால் பெற முடியவில்லை.

காற்றில் வரும் கீதமே......... ரதியில் செல்போன் ஒலித்தது சென்று எடுத்தாள் அது வேணுவின் அழைப்பு 'கதவை திற' என்று வேணு கூறவே செல்போனை வைத்து விட்டு கதவை திறந்தாள் ரதி. வேணுஷா தனது வயதை ஒத்த இன்னொரு பெண்ணை அழைத்து வந்திருந்தாள். அப்பெண்ணை எங்கோ பார்த்து பழகிய ஞாபகம் 'மறந்து விட்டாயா? ரதி நீ என்னை மன்னிப்பாயா? என்றாள் அதே குரல் அது வேறுயாருமில்லை. கட்டியனைத்தாள் ரதி அது றகீமா தான். மூவர் கண்களிலும் நீர் ஆறாய் பெருகியது.

**S. அஞ்சலி**
**திருகோணமலை**

---

**கதை**

## சேற்றில் விளைந்தது

பாயை விரித்துப் படுத்துக்கொண்டேன். நள்ளிரவாகியும் நித்திரைவரவில்லை. தூரத்தில் நாயொன்று எதற்கோ ஊளையிட்டுக் கொண்டிருந்தது. தலைமாட்டுக்குள் கையைவிட்டு தீப்பெட்டியைத் தேடினேன். என் மனைவியும் எழுந்துவிட்டாள்.

"என்னங்க இன்னம் தூங்கல்லயா..."

நான் எதுவும் பேசவில்லை, பாயில் கிடந்த துண்டைத் தோளில் போட்டுக் கொண்டு, தீப்பெட்டியை கையில் எடுத்தவாறு திண்ணைக்கு நடந்தேன். மறுபறத்தில் என் மகன் தூங்கிக் கொண்டிருக்கிறான். காலையில்தான் பல்கலைக்கழகத்திலிருந்து வந்தான். அவன் ஒரு பட்டதாரி. கிழிந்த பாயில் நுளம்புக்கடிக்குள் அவன் தூங்கும் பரிதாபத்தை சில வினாடிகள் பார்த்துக்கொண்டே திண்ணைக்குச் சென்று குத்தியில் அமர்ந்துகொண்டேன்.

முற்றத்துத் தென்னந்தோப்பிலிருந்து விளையாடிய "குளு குளு" காற்று என்னையும் தழுவி எனக்கு ஆறுதல் சொல்லிக்கொண்டு போகிறது. உலகமே உறங்குகிறது. என் கண்கள் மாத்திரம் அந்தப் பாக்கியத்தை இழந்துவிட்டன. நான் கண்ட கனவு நனவாகிவிட்டது. ஆம் என் மகன் ஒரு பட்டதாரி.

"வாப்பா... இனி ஒண்டுக்கும் கவலப்படாதங்க வாப்பா... எனக்கி பேங்குல வேல கெடக்கப்போகுது... நம்மட கஸ்டமெல்லாம் இனி வெலகப்போகுது..."

காலையில் அவன் வந்தவுடன் சொன்ன வார்த்தைகள் எரியும் என் காதுகளுக்குள் இன்னும் தேன் வார்க்கிறது. காலையில் அவனைப் பார்க்க எத்தனை பேர் வந்தார்கள். அத்தனைபேரும் படித்தவர்கள். வந்தவர்களை உக்கார வைப்பதற்கு என் மகன் பட்டபாடு கொஞ்சமா! வீட்டில் நல்ல பாயில்லை. நாங்கள் படுக்கும் கிழிந்தபாய்களைக் கொண்டு பொருத்தி ஒருவாறு சமாளித்துவிட்டான்.

வந்தவர்களுக்கு தேனீர் கொடுக்க அவன் பட்ட சங்கடத்தைப் பார்த்துவிட்டு நான்தான் பக்கத்துக் கடைக்குச் சென்று வழமைபோல பல்லிழித்து, "வாறமாசம் வெள்ளாம வெட்டினா மொதல்ல ஒண்ட கடனத்தான் அடக்கிற..." என்று கடைக்காரனுக்கு நம்பிக்கை கொடுத்து கொஞ்சம் சீனி வாங்கி வந்து கொடுப்பது பெரும் பாடாகிவிட்டது. எப்படியோ வந்தவர்களை சமாளித்து அனுப்பிய என் மகன் பட்டதாரிக்கு இன்றிரவுச் சாப்பாடு பகல் ஆக்கிய பழஞ்சோறும் பொட்டியான் சுண்டலும்தான். என்னால் என்ன செய்யமுடியும்! முடிந்தவரை உழைத்து இவனைப் படிப்பித்திருக்கிறேன். இனி இவன்தான் குடும்பத்தைக் காப்பாற்றவேண்டும்.

இவனைப் படிப்பிக்க நான் பட்ட க்'டங்கள் கொஞ்சமா! காலையில் கண் கழுவிக் கொண்டு என் மகன் காலை உணவுமில்லாமல் பாடசாலை செல்லும்போது என் வயிறு பற்றி எரியும். இவன் அடிக்கடி வந்து கொப்பி, புத்தகமென்று கேட்கும்போது கையில் இருந்தால் வாங்கிக் கொடுப்பேன், இல்லையென்றால் எப்படிச் சமாளித்தானோ எனக்குத் தெரியாது.

இவன் பள்ளிக்கூடத்தில் படிக்கும் காலத்தில் இப்படித்தான் ஒருநாள் திடீரென்றுவந்து, "வாப்பா... ஸ்கூலால ட்றிப் போபறாங்க வாப்பா... நானும் போப்றன்... எனக்கும் நாலாயிரம் 'ரூவா தாங்க... கட்டாயம் தரணும்..." என்று வற்புறுத்திவிட்டு என் தலைமீதும் மனம் மீதும் பெரும் பாறாங்கல்லை ஏற்றிவிட்டு அவன் சென்றுவிட்டான்.

"என்னங்க... ஓரமா யோசிக்காதங்க... மகன் அப்பிடி என்னத்த கேட்டுட்டாரு... காசி நாலாயிரம்தானே.. நீங்க கவலப்படாதங்க எல்லாப் புள்ளைகளும் போக்கொள்ள நம்மட புள்ளயும் போகத்தானே வேணும்... காசப்பத்தி நீங்க யோசிக்காதிங்க... நான் என்ர காக்கா அனிவாட்ட போப்றன்... நான் கேட்டா என்ர காக்கா இல்லண்டு செல்லமாட்டா... அண்டக்கி வீட்ட வந்த காக்கா சென்ன... தங்கச்சி நீ என்ன வேணுமெண்டாலும் எனக்கிட்டகேளு... நீ எண்ட ஒரே ஒரு தங்கச்சி, ஒனக்கு தராம வேற ஆருக்கு எண்டு... நான் காக்காட்டபோய் பின்னேரம் கேக்கப்போறன்... அவரு எனக்கி இல்லண்டு செல்லமாட்டாரு..."

என்று என் மனைவி என் தலைப்பாரம் இறங்கப் பேசிக் கொண்டிருந்தாள். அவள் பேச்சு எனக்கு நம்பிக்கை கொடுத்தது. சொன்னது போலவே சென்றுவிட்டாள். ஹனிபா வீட்டுவாசல் திறந்தே கிடந்திருக்கிறது. எந்தச் சலனமுமில்லாத முகத்துடன் என் மனைவி கூப்பிட்டுக்கொண்டே உள்ளே சென்றிருக்கிறாள்.

"காக்கா... இரிக்கங்களா..!"

"ஓமோம்... வாங்க தங்கச்சி... எங்க மச்சான் வரல்லயா..?" ஹனிபா நல்ல கனிவுடன் தான் வரவேற்றிருக்கிறான். சத்தமில்லாமல் சமயலறைக்குள் வேலை செய்துகொண்டிருந்த ஹனிபாவின் மனைவி கொஞ்சம் சத்தம் போட்டுக் கூப்பிட்டாள். "இஞ்சப்பாருங்க... கொஞ்சம் வாங்க..."

மனைவியின் குரல் கேட்டால் மறுகணம் தாமதிக்கமாட்டார் ஹனிபா.

"என்னபுள்ள கூப்பிட்ட..."இஞ்சப்பாருங்க... என்னயாம் ஒங்குட அருமத்தங்கச்சி வந்நிருக்கிற... என்னத்தயாலும் கறக்கலாமெண்டு வந்நிருக்காவாக்கும்... என்னத்தயாலும் [illegible] அனுப்புங்க... சரியா..." மனைவியின் ஆணையை ஹனிபா எப்பொழுதும் தாண்டியதில்லை.

"சரி... சரி... நான் பாத்துக்கிறன்..."ஹனிபா மீண்டும் வந்து அமர்ந்தார்.

"மறுகா... என்னடா தங்கச்சி மாலபட்டநேரம் வந்திருக்காய்... என்ன வெளக்கம்..." முகத்தில் ஒரு விருப்பம் இல்லாமல் ஹனிபா கேட்கும் வார்த்தைகளுக்கு என்ன சொல்வதென்று புரியாமல் மௌனமாக என் மனைவி யோசித்துக் கொண்டிருந்திருக்கிறாள்.

"என்னடா தங்கச்சி யோசக்கிற..."இல்ல காக்கா... எண்ட மகன் ஸ்கூலால ட்றிப் போகப் போறானாம்... நாலாயிரம் 'ரூவா கேக்கான்... எனக்கிட்டயும் கைல இல்ல... நீங்கதான் பாத்து கொஞ்சம் கடனா உதவி செய்யணும்..."

ஹனிபாவின் முகம் மாறுபட்டதிலிருந்து என் மனைவிக்கிக் கொஞ்சும் சந்தேகம். அதனால்தான் தயங்கித் தயங்கிக் கேட்டிருக்கிறாள்.

"ஐசே... கொஞ்சம் லேட்டாகிட்டயே தங்கச்சி... இப்பதான் இருந்த காசையெல்லாம் குடுத்து எண்ட மூத்தவளுக்கு உடுப்பு எடுத்து வந்த... அவளுக்கு நாளக்கி "பேத் டே". இனி அவவும் ஒரு சங்கிலி வாங்கணுமாம் நேத்தேல்லாம் புறுபுறுக்காள்... இப்ப கைல அறவே காசில்ல..."

ஹனிபாவின் வார்த்தைகள் என் மனைவிக்கு ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கிறது. என் மனைவியின் கொதிக்கும் மனசைப்போல ஒரு தேனீரைக் கொண்டுவந்து விருப்பமில்லாமல் வரண்ட புன்னகை யோடு ஹனிபாவின் மனைவி வைத்துவிட்டுப் போவது என் மனைவிக்கிப் புரியாமலில்லை. தேனீரை எடுத்துப் பருகமனமின்றி அவமானம் தாங்க முடியாமல் ஏமாற்றத்தோடு வீடுவந்த என் மனைவி ஒரு மாதமாக அதைச் சொல்லிச் சொல்லி வெப்பிசாரப்பட்டிருக்கிறாள்.

என் நண்பன் ஒருவனிடம் என் நிலைமையைச் சொல்லி, அவன் மனைவியின் தங்கச் சங்கிலியைக் கொடுக்க அதை ஈடு வைத்து என் மகனுக்கு நாலாயிரம் கொடுத்தேன். என் மகன் சந்தோ'த்தால் இறக்கை கட்டிப் பறந்தான். அவனுக்கென்ன தெரியும் இளங்கன்று. ஆக்கின சோற்றுக்கு கறியில்லாமல் நாங்கள் படுகின்ற துன்பம் அவன் தெரிந்திருக்க நியா'யமில்லை. சுற்றுலாச் செல்வதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்துமுடித்தான். அவனிடத்தில் இருக்கின்ற ஓரிரு ஆடைகளைக் கழுவி அதனை அயன் பண்ணவேண்டும் என்று இவன் தன்னுடைய மாமா வீட்டுக்கு அதான் ஹனிபா வீட்டுக்குச் சென்றிருக்கிறான். அவனுக்கென்ன தெரியும் கள்ளங்கபடம் தெரியாதபிள்ளை.

"மாமா... இந்த உடுப்பக் கொஞ்சம் அயன் பண்ணைப்பா மாமா..."

"உடுப்பு அயன் பண்றத்துக்கு இதன்ன வண்ணாண்ட ஊடா... நீங்க அயன் பண்ணாமப் போட மாட்டிங்களோ. போங்கபோங்க அதல்லாம் இஞ்ச பண்ணேலா..."

என் மகன் முகஞ்செத்து வந்து என்னிடம் சொல்லிச்சொல்லி அழுததை நினைத்தால் இப்பொழுதும் என் நெஞ்சு கொதிக்கிறது. இப்பொழுது என் மகன் ஒரு பட்டதாரி. இந்த ஊரில் இவனை எத்தனையோ பேர் மாப்பிள்ளை கேட்கிறார்கள். ஊரிலுள்ள போடிமாரெல்லாம் என் மகனுக்காக போட்டிபோடுகின்ற காலம் வந்துவிட்டது. இப்போதுநான் இல்லாதவன் ஏழை என்று யார் பார்க்கிறார்! ஏனென்றால் என் மகன் சேற்றில் விளைந்த செந்தாமரையாகிவிட்டானே.

போதாக்குறைக்கு பகல் அவரும் வந்தார். யார்! அவன்தான் என் மச்சினன் ஹனிபா. அவன் வசதிக்காரன் என்று காட்டுவதற்கு தன்னுடைய காறில் மனைவியோடு வந்து இறங்கினான். மச்சான் மச்சினன் என்று புதிதாக உறவுமுறை பேசினான். அவன் சுற்றிவளைக்காமலே என் மகனை தன் மகளுக்கு மாப்பிள்ளை கேட்டான். மறுகணமே என் மனம் எரிமலையாய் வெடித்தது. கோபத்தை என் மனசு கொப்பளித்தது.

"டேய் அனிவா... நீயும் ஒரு மனிசனா... ஒனக்கா எண்ட மகன் மாப்புள... நீ எல்லாத்தையும் மறக்கலாம் நான் ஒண்டையும் மறகல... ஒன்னப்போல மனிசத்தன்ம இல்லாத மனச்சாட்சியில்லாத பணத்தாச புடிச்ச மிருகத்துக்கு எண்ட மகனக் குடுக்கிறத அவனச் சும்மாதிரியச் செல்லுவன்..."

என்று கதைத்த கதைகள் அவனை முள்ளாகத் தைத்திருக்கவேண்டும். உடனே ஹனிபா எழுந்து சென்றுவிட்டான்.

இருந்தாலும் நான் அவனுக்குப் பகல் அப்படிப் பேசியிருக்கக்கூடாது. அவன்தான் அப்படியென்றால்... நாமும் அப்படியா... என்னால் தாங்க முடியவில்லை... என்னால் தூங்கவும் முடியவில்லை. வீட்டுக்கு வந்த அவனை நான் அப்படிப் பேசியிருக்கக்கூடாது. திரும்பிப் பார்க்கிறேன். என் மனைவி என் பின்னே நின்று கொண்டிருக்கிறாள்.

"என்னங்க... தூங்கல்லயா... பகல் நடந்தத நெனச்சிக்கி மனசப்பொட்டு கொழப்பாம வந்து படுங்க"

"இல்ல ஆயிஷா... நான் அப்பிடி அனிவாக்கு கதச்சிருக்கப்படா... நீ காலத்தால அவண்ட ஊட்டபோய் மாப்புள ஒனக்குத்தான் என்டுசெல்லு..." என்று சொன்னதும் என் மனைவி சந்தோசத்தால் பூத்துப்போனாள். கரியமேகங்கள் விலகியதால் முழு நிலா பிரகாசிக்க ஒளி மழையில் இரவுக் காடாய்க் கிடந்த உலகம் குளித்துச் சிரித்தது. இப்போது என் மனதைப் போல...

**ஜே.வஹாப்தீன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடுவீர்

அன்புத்தம்பி- தங்கையே,
அவையில் பேச விருப்பமா?
இனபத் தமிழை ஏந்துவீர்,
இனிக்க இனிக்கப் பேசுவீர்!

அவையைப் பார்த்துப் பேசுவீர்,
அமைதி தோன்றுப் பேசுவீர்!
எவையும் வரம்பு மீறிடா(து)
இருக்கப்பாத்துக் கொள்ளுவீர்!

கை ஒலிக்கப் பேசுவீர்,
கருத்தினோடு பேசுவீர்!
கையைக்காட்டிப் பேசுவீர்,
கதையும் பாட்டும் கூட்டுவீர்!

அவையில் அரவம் கேட்குமேல்
அவர்க்கு விருப்பம் இல்லையேல்
எவையும் பேசிடாமலே
இருப்பிடத்தை நாடுவீர்!

**'தாமரைத்தீவான்'**
**(ஈச்சந்தீவு – கிண்ணியா)**

## இருத்தலுக்கான தப்பித்தல்

கடலுக்குள் இருந்து
திமிறி எழுந்த வந்த
மீன் ஒன்று கரையில்
கட்டியிருந்த வாடியினுள்
தூக்கிட்டு தொடங்கியது.
எல்லாமீன்களையும்
குளிர்க் கட்டியினுள்
அழுத்தினார்கள்
அதனை மட்டும்
வித்தியாசமாய் பார்த்தது
விட்டுச் சென்றனர்.

வலையிலிருந்து பிடுங்கப்பட்டு
குற்றுயிராய் கிடந்த
சில மீன்கள்
இறுதி மூச்சுக்களில்
முணங்கிக்கொண்டன
" இருத்தலுக்கான தப்பித்தல்"
எவ்வளவு கடினமானது
அதோ தூக்கில்
தொங்குகின்றானே
அவன் புத்திசாலி
வலைகளுக்கு ஏமாந்து
சித்திரவதைப் படுவதை விட
தானாக தைரியமாக
தேடிக்கொண்டோன்.

# கவி முரசு



சேர்ந்திருக்கலாம்
வலைகளில் சிக்கி
உயிர் பிரிதலுக்கான
துடிப்பின் வலியாவது
மிஞ்சியிருக்கும்"

சிக்கும் போதும்
விடுபட துடிக்கும் போதும்
வலையில் இருந்து
பிடுங்குப்படும் போதும்
மீதமாய் இருக்கும் மூச்சினை
காத்துக் கொள்ள துடிக்கும்
உயிர் பிரியும் போராட்டம்
எவ்வளவு துன்பமானது
தெரியுமா?

**அரங்காலயா பிரதீப்**

## உன்னைத்தேடி

உன் உதட்டழகின்
உதப்பலுக்கும் சீழ்
வடியும் உன் அகன்று
சுருங்கும் அல்குழினுள்
அகம் புறம் சென்று
வரும் என் குறி
பெறும் இன்பத்துக்கும்
கச்சகன்ற உன் மார்பின்
மருவர்களினால் ஏற்படும்
பூரண சுகத்துக்கும்
உன் துகிலகன்ற மொத்த
அழகை கண்டு என் சிந்தம்
கலைந்தும் ரசிக்கவும்
இன்பச் சாகரத்தை
பருகவும் உன் வீட்டு
நாய்போல் வலம்
வரவில்லை நான் உன்னை
தேடுவதெல்லாம் உன் மீது
நான் கொண்ட
உன்மைக் காதலுக்காய்

**செந்தூரன்**

# இலங்கையில் தமிழ் பௌத்தம் 04

திருகோணமலை சோழர் ஆட்சியின் கீழ் வந்த பின்னர் அது பல நிர்வாகப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஆட்சி செய்யப்பட்டது. அதில் ஒரு பெரும் பிரிவு இராஜேந்திரசிங்க வளநாடு. இந்த வளநாட்டில் அடங்கி இருந்த ஊர்களில் ஒன்றே வெல்காமம்.

வெல்காமத்தில் இருந்த தமிழ் பௌத்த விகாரை முதலாம் இராஜராஜனது பெயரால் ராஜராஜப் பெரும்பள்ளி என்றும், வெல்காமத்தில் இருந்ததனால் வெல்காமப் பள்ளி ( இன்றைய வெல்கம் விகாரை )என்றும் அழைக்கப்பட்டது.இங்கு கண்டுபிடிக்கப்பட்ட 16 தமிழ் சாசனங்களில் பெரும்பாலானவை தானசாசனங்கள்.

இச்சாசனங்கள் பெரும் பள்ளிக்கு வழங்கப்பட்ட தானங்கள் பற்றிச் சொல்கிறது. தானகாரர்களின் பெயர்,அவரது ஊர்ப் பெயர் ,பதவி அல்லது விருதுப் பெயர் அவர் வழங்கிய நன்கொடை என்பன அச்சாசனங்களில்குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இச்சாசனங்களில் ஒன்று புதுக்குடி என்ற ஊரைச் சேர்ந்த ஆதித்த பேரரையன் இராஜராஜப் பெரும்பள்ளிக்கு ஒரு விளக்கினையும் ,8 பசுக்களையும் மற்றும் பல பொருட்டகளையும்(சாசன எழுத்துக்கள் தெளிவில்லையாதலால் குறிப்பிட முடியவில்லை) தானமாகக் கொடுத்த செய்தி பதிவு செய்யப் பட்டுள்ளது.

இங்கு குறிப்பிடப்படும் ஆதித்தன் என்பது அவனது இயற்பெயர். பேரரையன் என்பது சோழரின் நிர்வாகத்தில் சேவைபுரிந்த பிரதானிகளில் ஒரு வகையினருக்கு வழங்கப்பட்ட பதவிப்பெயர். அவனது ஊர் புதுக்குடி.புதுக்குடி என்னும் பல ஊர்ப்பெயர்கள் இலங்கையில் உள்ளதால் ஆதித்த பேரரையன் சோழரின் நிர்வாக அதிகாரியாகப் பணிபுரிந்த இலங்கைத் தமிழனா என்ற சந்தேகத்தைத் தருகிறது.

எனவே இன்று இலங்கையில் வடகிழக்குப் பகுதியில் காணப்படும் புராதான பௌத்த விகாரைகள் தொடர்பான புரிதலுக்கு இலங்கையில் "தமிழ் பௌத்தம்" பற்றிய ஆராய்வு அவசியமாகிறது.

"தமிழ்த் தேரர்கள் ஆற்றிய பணிகள்" ஆரம்ப நாட்களில் இலங்கையில் பௌத்தம் பரவ தமிழ்த் தேரர்கள் ஆற்றிய பணிகளே குறிப்பிடத்தக்கதாக இருந்தன.



அவற்றில் சங்கமித்திரர் இலங்கையில் தமிழ் பௌத்தத்திற்கு ஆற்றிய பணிகளை முன்னைய கட்டுரையில் பார்த்திருந்தோம்.

இனிஆசாரிய புத்ததத்த மகாதேரர்சோழநாட்டில் பிறந்த தமிழராகிய இவர் கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த பௌத்தர்களால் பெரிதும் போற்றப் படுகின்ற பௌத்த சமய ஆசாரியர் ஆவார்.அவர் தாம் இயற்றிய நூல்களில் சோழ நாட்டையும் , காவிரிப்பூம்பட்டினத்தையும், பூதமங்கலத்தையும் இனிமையாக புகழ்ந்து பாடியிருக்க்கும் இவர் இயற்றியநூல்கள்.,1.மதுராத்தவிலாசினீ 2.அபிதம்மாவதாரம்,3.வினயவினிச்சயம் 4.உத்தரவினிச்சயம்,5.'ரூபா'ரூபவிபாகம் 6.ஜினாலங்காரம் சிலகாலம் இலங்கையின் மகாவிகாரையில் தங்கி இருந்த மகாதேரர் இலங்கை அரசன் மகாநாமன் (கி.பி.409-431) காலத்தவர் என மகாவம்சம் பதிவு செய்கிறது. புத்ததத்தரின் நூல்கள் இன்று இலங்கையின் பௌத்தசங்கத்தினரால் பொக்கி'ங்களாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

ஆசாரிய தருமபாலர் காஞ்சி புரத்தின் பௌத்த மகாவிகாரையின் மகாதேரராக இருந்த ஆசாரிய தருமபாலர் இலங்கைக் வந்து அநுராதபுரம் மகாவிகாரையில் தங்கியிருந்த பொழுதில் சூத்திர பிடகத்தின் சில பகுதிகளுக்கு உரை எழுதியிருக்கிறார்.

இவ்வுரை பிடகநூல்களுக்குச் சிங்கள மொழியில் எழுதப்பட்டிருந்த பழைய உரைகளையும் ,தமிழ்நாட்டுப் பௌத்தப் பள்ளிகளில் இருந்த பழைய திராவிட உரைகளையும் கற்று ஆராய்ந்து எழுதப்பட்டதாகும். அநுருத்தர்இவர் பாண்டிய நாட்டைச் சேர்ந்த தமிழ் பௌத்த தேரர். மதுரையிலிருந்த சோம விகாரையின் தலைவராக இருந்தவர்."அபிதம்மாத்த சங்கிரகம்", "பரமார்த்த வினிச்சயம்", "நாம'ரூபப் பரிச்சேதம்" என்னும் நூல்களை இயற்றியிருக்கின்றார். இவர் எழுதிய அபிதம் மாத்த சங்கிரகம் என்ற பாளி நூல் இலங்கைப் பௌத்த சங்கத்தினராலும், பர்மா பௌத்த சங்கத்தினராலும் படித்துப் பேணப்படும் பிரபலமான பௌத்த காவியமாகும்தம்மகீர்த்திஇலங்கையைக் கி.பி. 1236 முதல் 1268 வரையில் அரசாண்ட இரண்டாம் பராக்கிரம பாகு ஆதரித்த தம்மகீர்த்தீ "தம்பராட்டா" என்னும் பாண்டிய மண்டலத்தைச் சேர்ந்தவர்.

தாட்டா வம்சம் என்னும் நூலினை பாளி மொழியில் இயற்றிய இவர் காலத்தில் இரண்டாம் பராக்கிரமபாகு 'சோழநாட்டிலிருந்த பௌத்த பிக்குகளை இலங்கைக்கு வரவழைத்து ஒரு பெரிய பௌத்த மகாநாடு நடத்தினான்.

எனவே மேற்கூறிய எடுத்துக் காட்டுகள் இலங்கையில் பௌத்தமத ஆரம்ப கால வரலாற்றில் தமிழர்களின் பங்களிப்பு கணிசமாக இருந்திருக்கிறது என்பதனை உறுதிப்படுத்துகிறது. "அன்றைய நாட்களில் துறவு பூண்ட தமிழ் அறிஞர்கள் இலங்கைக்கு வந்திருக்காவிட்டால் இன்று சிங்கள பௌத்த சமயத்தை காண வாய்ப்பே இல்லாது போயிருக்கும் என்ற சிங்கள வரலாற்றாய்வாளர் திரு.லயனல் சரத் அவர்களின் கூற்றுதமிழர்களின் பங்களிப்பை உறுதிப்படுத்துகிறது.தமிழகத்தில் பக்தி இயக்கத்தின் எழுச்சியும், இலங்கையில் வீர சைவமத பிரிவினைச் சேர்ந்த



மாகனின் ஆட்சியும் தமிழ் பௌத்தத்தின் சுவடுதெரியாமல் அழித்த பல நூற்றாண்டுகளுக்குப் பின்னால் நாம் நிற்க்கிறோம். எனவே வடகிழக்குப் பகுதியில் காணப்படும் புராதான பௌத்த விகாரைகள் நம் புருவத்தை உயர்த்தச்செய்பவையாக இருக்கின்றன. பௌத்தம் ஒரு குறிப்பிட்ட இனத்தின் அடையாளமாகிப் போனதன் விளைவிது. இலங்கையில் "தமிழ் பௌத்தம்" தொடர்பான தேடலின் மிகச்சிறிய பகுதியே இதுவரை நீங்கள் பார்த்தது. வருங்காலங்களில் இலங்கையில் தமிழர்களின் வரலாறு தொடர்பாக ஆராய்கையில் "தமிழ் பௌத்தம்" தொடர்பான ஆதாரங்களும் முக்கியத்துவம் பெற்றவையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

**- வைத்திய கலாநிதி த.ஜீவராஜ் -**

ஆதாரங்கள்

1. இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள் - பேராசிரியர்.சி.பத்மநாதன்.2006.
2. பௌத்தமும் தமிழும் - மயிலை திரு.சீனி. வேங்கடசாமி (1900-1980)
3. சமணமும் தமிழும் - மயிலை சீனி. வேங்கடசாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடிப்புக்கு குட்பை சொன்ன ரிச்சா



தனது திரையுலக நடிப்பிற்கு குட்பை சொல்லிவிட்டார் ரிச்சா கங்கோபாத்யாய்.

தமிழில் மயக்கம் என்ன படத்தில் தனுக்கு ஜோடியாக அறிமுகமானவர், தொடர்ந்து சிம்புவுக்கு ஜோடியாக ஒஸ்தி படத்தில் நடித்தார்.இரண்டுமே பெரிய இயக்குனர்கள், முன்னணி நடிகர்களின் படங்கள்தான், ஆனால் அந்தப்படங்கள் கைகொடுக்கவில்லை. கூடவே ரசிகர்களும் ரிச்சாவுக்கு ஆதரவுக்கரம் நீட்டவில்லை.

தெலுங்கில் இந்த வருடம் அவர் நடித்துள்ள ஒரே படம் 'பாய்'.

நாகர்ஜுனாவுக்கு ஜோடியாக ரிச்சா நடித்துள்ள இந்தப்படம் வரும் 25ம் திகதி வெளியாக இருக்கிற நிலையில், ரிச்சா தானாகவே முன்வந்து சினிமாவை விட்டு விலகுவதாக அறிவித்திருப்பது கொஞ்சம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்து அவர் கூறுகையில், நான் சினிமாவை விட்டு விலகுவது பலருக்கு அதிர்ச்சி அளிக்கும் என்று எனக்குத்தெரியும். ஆனால் நடிப்பா, படிப்பா என்ற கேள்வி வரும்போது என் எதிர்கால வாழ்க்கையை தீர்மானிக்கும் படிப்புதான் முக்கியம் என தோன்றுகிறது.

அதனால் இடையில் நிறுத்திய படிப்பைத் தொடர அமெரிக்கா செல்கிறேன் என்றும் எனது பெற்றோர்கள், நண்பர்களுடன் எனது பழைய வாழ்க்கையை ஆரம்பிக்க இருக்கிறேன் எனவும் கூறியுள்ளார்.

மேலும் இந்த ஐந்து வருடங்களில் எனக்கு ஆதரவு கொடுத்த ரசிகர்களை நான் மறக்கமாட்டேன் என்ற தனது இணையதள பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார் ரிச்சா.

## அட்லியை பாராட்டிய உலகநாயகன்



'ராஜா ராணி' படத்தின் 25வது நாளை முன்னிட்டு உலகநாயனிடம் ஆசிர்வாதம் பெற்றுள்ளார் இயக்குனர் அட்லி.

தன்னுடைய முதல் படமான ராஜா ராணி திரைப்படத்தின் மூலம் தரமான காதல் படங்களை இயக்குவதில் கைதேர்ந்தவர் என்ற முத்திரையை பதித்துள்ளார் அட்லி.இன்று படத்தின் 25ஆம் நாளை முன்னிட்டு பத்மஸ்ரீ கமல்ஹாசனை நேரில் சந்தித்து ஆசி பெற்றுள்ளார்.

இதுகுறித்து அட்லி கூறுகையில், ராஜா ராணி படத்தை கமல் சார் தான் துவக்கினார். வெற்றி பெற்றதும் அவரிடமே ஆசி பெற வேண்டும், அவருக்கு இந்த வெற்றியை சமர்ப்பிக்க வேண்டும் என்று முடிவெடுத்தேன். என்னுடைய உழைப்பு அதன் பிரதி பலனாக கிடைத்த வெற்றி ஆகியவை பற்றி விவரமாக கேட்டு அறிந்தவர், படத்தின் சிறு நுணுக்கத்தையும் விசாரித்த போது அந்த மனிதரின் திரை உலக ஞானம் எவ்வளவு பெரியது என புரிந்தது.

மேலும் இந்த உன்னதமான நேரத்தில் எனது தயாரிப்பாளர்கள் பாக்ஸ் ஸ்டார் ஸ்டூடியோஸ், எ.ஆர்.முருகதாசின் தயாரிப்பு மற்றும் நெக்ஸ்ட் பிக் பிலிமஸ் நிறுவனத்தினருக்கு என் மனமார்ந்த நன்றி என்றும் என்னுடைய படத்தில் பணியாற்றிய நடிகர், நடிகையர் ஆகியோருக்கும் மனமார்ந்த நன்றிகள் எனவும் கூறியுள்ளார்.

## ஹன்சிகாவின் அடுத்த ஹீரோ



டோலிவுட்டில் புதுப்படம் ஒன்றில் கமிட்டாகியுள்ளாராம் ஹன்சிகா மோத்வானி.

ஹன்சிகாவை பொறுத்த வரையில் 2013 அமர்க்களமான ஆண்டு என்றுதான் சொல்ல வேண்டும்.ஏனெனில் ஒரு கல் ஒரு கண்ணாடி, தீயா வேலை செய்யணும் குமாரு, சிங்கம் 2 என வரிசையாக வெற்றிப் படங்களை கொடுத்து வந்தவர் இப்போது தெலுங்கிலும் பிசியாகி விட்டார். தெலுங்கின் மாஸ் ஹீரோ ரவிதேஜாவுடன் ஒரு படத்தில் ஜோடி சேர்ந்துள்ளார்.

இந்தப் படத்தை ரவிதேஜா நடித்த பலுபு, டான் சீனு, மிஸ்டர் பெர்.'.பெக்ட், மற்றும் அன்ட் பாடிகார்ட் படங்களுக்கு ஸ்கிரிப்ட் எழுதிய கே.எஸ்.ரவீந்திரா என்கிற பாபி இயக்குகிறார். பிரம்மாண்ட தயாரிப்பாக உருவாக இருக்கும் இந்தப் படத்தை ஒய்.வி.எஸ்.சௌத்ரி தயாரிக்கிறார்.

இன்னும் பெயரிடப்படாத இந்தப் படத்தின் படப்பிடிப்பு நவம்பர் 5ம் திகதி தொடங்குகிறது.

## நான் அப்பாவாகிட்டேன்: குஷியில் சிவகார்த்திகேயன்

அப்பாவாக ப்ரமோஷன் கிடைத்துள்ளதால் குஷியில் இருக்கிறாராம் சிவகார்த்திகேயன்.

சின்னத்திரையில் இருந்து வெள்ளித்திரையில் கொடிகட்டி பறப்பவர் சிவகார்த்திகேயன்.தமிழில் வெற்றிப்படங்களை கொடுத்துள்ள இவர் தற்போது ஹன்சிகாவுடன் இணைந்து மான் கராத்தே படத்தில் பிசியாக நடித்துவருகிறார்.

இவரது படங்கள் குவிக்கும் வசூலால் நடிகர்கள் மத்தியில் ப்ரமோஷன் ஆனது மட்டுமல்லாமல் வாழ்க்கையிலும் ப்ரமோஷன் கிடைத்துள்ளது. அந்த தித்திப்பான செய்தி என்னவென்றால் கடந்த 2010ம் ஆண்டு திருமண பந்தத்தில் இணைந்த இவருக்கும், இவரது மனைவி ஆர்த்திக்கும் அழகிய பெண் குழந்தை பிறந்துள்ளது என்பதே அந்த செய்தி.

இந்த சந்தோஷ செய்தியினை தனது உறவினர்களுக்கும், நெருங்கிய நண்பர்களுக்கும் ஸ்வீட் கொடுத்து கொண்டாடுகிறாராம் சிவகார்த்திகேயன்.

# சினிமுரசு

## கௌதம் மேனன் இயக்கத்தில் அஜித்?



தயாரிப்பாளர் ஏ.எம்.ரத்னத்தின் கடன் பிரச்சினைகளை தீர்க்க அவருக்கே மீண்டும் ஒரு படம் நடித்துத் தரப்போகிறாராம் அஜித்.

ஏ.எம்.ரத்னம் தயாரிப்பில் அஜித், ஆர்யா, நயன்தாரா மற்றும் டாப்சி நடித்துள்ள படம் ஆரம்பம்.கடன் சுமையில் இருந்து ஏ.எம்.ரத்னம் மீள்வதற்காக இந்தப் படத்தை ஒப்புக் கொண்டார். இருந்தாலும் இந்தப் படத்தின் மூலம் கிடைக்கும் பணத்தைக் கொண்டு ஓரளவுக்குத்தான் அவரால் கடன் சுமையில் இருந்து மீள முடியுமாம்.

இதனால் சிறுத்தை சிவா இயக்கும் வீரம் படத்துக்குப் பிறகு, ஏ.எம்.ரத்னம் தயாரிப்பில் இன்னொரு படத்திலும் நடிக்கப் போகிறாராம். இதற்காக பக்காவான கதையைத் தயார் செய்து வைத்திருக்கும் இயக்குனரைத் தேடி வருகிறாராம் தயாரிப்பாளர் ஏ.எம்.ரத்னம். இந்நிலையில் கௌதம் மேனனுக்கும் கொஞ்சம் கை கொடுப்போமே என்ற எண்ணத்தில், அவருக்கு கால்ஷீட் தர முடிவு செய்துள்ளாராம்.

இரு ஆண்டுகளுக்கு முன் அஜித்தை வைத்து கௌதம் மேனன் படம் இயக்கப்போவதாக அறிவிப்பெல்லாம் வெளியாகி பின்னர் கதைப் பிரச்சனையால் அந்தத் திட்டம் ட்ராப்பானது குறிப்பிடத்தக்கது.

## ஹாட்ரிக் அடிக்க களமிறங்கும் தனுஷ்-வெற்றிமாறன்!

தேசிய விருது பெற்ற தனுஷ்- வெற்றிமாறன் வெற்றிக் கூட்டணியில் மூன்றாவது படம் உருவாகவிருக்கிறது.

ஆடுகளம் படத்திற்கு பிறகு சிம்புவை வைத்து வடசென்னை படத்தை இயக்குவதாக கூறினார் வெற்றிமாறன். ஆனால் சில காரணத்தினால் அப்படம் ட்ராப் செய்யப்பட்டுவிட்டது.

இந்நிலையில் மீண்டும் 3வது முறையாக தனுஷுடன் இணைந்து பணியாற்றவுள்ளார் இயக்குனர் வெற்றிமாறன்.

பெயரிடப்படாத இப்படத்தை மீகா என்டர்டெயின்மெண்ட் சார்பில் தயாநிதி அழகிரி தயாரிக்கிறார்.



இப்படத்தில் தனு"க்கு ஜோடியாக வழக்கு எண் மனிஷா யாதவ் நடிக்கவுள்ளார். அடுத்த ஆண்டு தொடக்கத்தில் ஆரம்பிக்கும் இப்படத்தின் திரைக்கதை அமைக்கும் பணி தற்போது விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. மேலும் இப்படத்தை பற்றிய ஏனைய தகவல்கள் டிசம்பரில் அறிவிக்கப்படுமாம்.

ஏற்கெனவே தனுஷ் - வெற்றிமாறன் கூட்டணியில் வெளியான பொல்லாதவன், ஆடுகளம் ஆகிய படங்கள் ரசிகர்களிடையே பெரும் வரவேற்பை பெற்றது குறிப்பிடத்தக்கது.

### அழகுராஜாவில் சர்ச்சைக்குரிய காட்சி நீக்கம்


ஆல் இன் ஆல் அழகுராஜா' படத்தில் சர்ச்சைக்குரிய காட்சியை நீக்கிவிட்டதாக இயக்குனர் ராஜேஷ் தெரிவித்துள்ளார்.

கார்த்தி, காஜல் அகர்வால் நடிப்பில் ராஜேஷ் இயக்கியுள்ள படம் ஆல் இன் ஆல் அழகுராஜா.இந்தப் படத்தில் சந்தானம் ஒரு காட்சியில், புகையிலை மற்றும் குட்கா எதிர்ப்பு விளம்பரத்தை கிண்டலடிப்பது போல காட்சி உள்ளது. இது ட்ரைலரில் இடம் பெற்றதால் கடும் எதிர்ப்புக்குள்ளாகி, தமிழ்நாடு புகையிலை கட்டுப்பாட்டு மக்கள் மன்றம் இதுகுறித்து தமிழக அரசிடம் புகார் தெரிவித்தது. மேலும் குட்கா சாப்பிட்டு புற்றுநோயால் இறந்த முகேஷ் என்ற மனிதன் தன் குரலால் நாட்டு மக்களை எச்சரிக்கும் வகையில் உருவாக்கப்பட்ட இந்த விளம்பரத்தைக் கிண்டலடிப்பதா என கண்டனம் தெரிவித்திருந்தது.இந்நிலையில் அந்தக் காட்சியே புகையிலைக்கு எதிரான பிரச்சாரம் தான் என்று விளக்கமளித்திருந்தார் இயக்குனர் ராஜேஷ்.

ஆனால் எதிர்ப்பு தொடர்ந்ததால் இப்போது அந்தக் காட்சியை நீக்குமாறு சென்சார் அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர். இதனைத் தொடர்ந்து சர்ச்சைக்குரிய அந்தக் காட்சியை படத்திலிருந்து நீக்கிவிட்டதாக ராஜேஷ் அறிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகை சுற்றிவர உதவும் புதிய தொழில்நுட்பம்



விண்வெளிப் பயணங்களை மேற்கொள்ள ஆவலாக இருப்பவர்களுக்கு ஒரு களிப்பூட்டும் செய்தி வெளியாகியுள்ளது.

அதாவது தரையிலிருந்து சுமார் 100,000 அடிகள் வரை உயரமான இடங்களுக்கு சுற்றுலாவிற்கு அழைத்துச்செல்லும் புதிய தொழில்நுட்பமான World View தொழில்நுட்பம் பற்றிய செய்தியே அதுவாகும்.

விசேடமாக உருவாக்கப்பட்ட பலூன் ஒன்றின் மூலம் இந்த திட்டம் எதிர்காலத்தில் சாத்தியமாகும் என தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் 2016ம் ஆண்டிற்கு பின்னரே இது நடைமுறைக்கு வரலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் இவ்வாறு ஒரு முறை பயணம் செய்வதற்கு 75,000 அமெரிக்க டொலர்கள் செலவாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

## மனித மூளையை போன்று செயல்படும் கணனி! IBM நிறுவனம் சாதனை



மனித மூளையை போன்று மின்னணு இரத்தத்தால் இயங்கும் கணனியை வடிவமைத்து IBM நிறுவனம் சாதனை படைத்துள்ளது. மனித உடல் உறுப்புகளிலேயே மிகவும் முக்கியமானது மூளை, மனிதன் இயங்குவதற்கு இன்றியமையாத ஒன்று. இதனை போன்று மின்னணு இரத்தத்தால் இயங்கும் கணனியை வடிவமைத்து IBM நிறுவனம் சாதனை படைத்துள்ளது.அதாவது, மனித மூளையை போன்று கணனி ஒருவகை திரவத்தால் சக்தியை பெறுவதுடன் அதே திரவத்தால் தன்னை வெப்பம் நீக்கி குளுமைப்படுத்தியும் கொள்ளும்.

மூளையில் உள்ள குருதிச் சுற்றோட்டத்தொகுதி போன்ற ஒன்று, ஒருவகை மின்னணு இரத்தத்தை கணனியின் வழியாக ஓடச் செய்வதன் மூலம் அந்தக் கணனிக்கான சக்தியை அதன் உள்ளே கொண்டு செல்லும். அத்துடன் அதிலிருந்து வெப்பத்தை வெளியேயும் கொண்டுவரும். சூரிச்சில் உள்ள இந்நிறுவனத்தின் சோதனைக் கூடத்தில் இவ்வாறு செயற்படக்கூடிய கணனியின் செயல்முறை விளக்கத்தை IBM டாக்டர் பாட்ரிக் ருச் மற்றும் டாக்டர் புருனோ மைக்கல் ஆகியோர் வழங்கினர். இவர்கள் கூறுகையில், தற்போதுள்ள கணனிகளில் ஒரு சதவிகிதம் மட்டுமே தகவல்களை பெறுவதற்கு பயன்படுவதாகவும், இந்த முறை பயன்படுத்தப்பட்டால் சிறப்பான கணனியை தம்மால் உருவாக்க முடியும் என்றும் தெரிவித்துள்ளனர்.

மேலும் 2060ஆம் ஆண்டளவில் முழுமையடையக் கூடிய இந்த முயற்சியின் மூலம், தற்போதைக்கு ஒரு கால்பந்தாட்ட மைதானத்தின் அரைவாசி அளவுக்கு பெரியதாக இருக்ககூடிய கணனியை ஒரு மேசையில் வைக்கும் அளவுக்கு சிறியதாக உருவாக்கிவிட முடியும் என்றும் தெரிவித்துள்ளார். இன்றைய நிலையில் IBM நிறுவனத்தின் அதிதீவிரமான சக்தி வாய்ந்த கணனியாக இருப்பது வட்சன் என்ற கணனியாகும். அமெரிக்காவில் நடந்த பொது அறிவுப் போட்டியில் இக்கணனி மனித மூளையை தோற்கடித்து விட்டது. எனினும் இது நியாயமற்றது என்று கூறும் விஞ்ஞானிகள், மனித மூளை 20 Watts சக்தியை மட்டுமே பயன்படுத்தியது என்றும், கணனியோ 85,000 Watts சக்தியை பயன்படுத்தியது என கூறுகின்றனர்.




# பால் போன்ற நிறம் கொண்ட சருமம் வேண்டுமா?

இன்றைய காலங்களில் நாம் நம்மை அழகுப்படுத்திக் கொள்வதில் மிகுந்த ஆர்வம் எடுத்து வருகிறோம்.அதிலும் முக்கியமாக வேலைக்குச் செல்லும் போது அல்லது விழாக்களுக்கு செல்லும் போது நாம் நம்மை அழகுப்படுத்திக் கொள்ள ஆசைப்படுகிறோம்.

அழகு என்றவுடன் உடை அலங்காரங்கள் தான் முதல் பங்கு வகிக்கின்றது. இரண்டாவதாக இருப்பது நமது முக அழகு தான். அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பது பழமொழியாக இருந்தாலும், ஒருவது தோற்றத்தை அழகாக்குவது முகம் தான். நாம் அனைவரும் விரும்புவது அழகான, பளிச்சிடும் மற்றும் குறையில்லா சருமத்தை தான்.

அத்தகைய சருமத்தை வீட்டில் உள்ள பொருட்களை வைத்தே பெறலாம்.

**ஒலிவ் எண்ணெய், தயிர் மற்றும் தேன்**

ஒரு மேசைக்கரண்டி பால் பவுடர், ஒரு மேஜைக்கரண்டி தயிர், ஒரு மேஜைக்கரண்டி தேன் மற்றும் அரை மேஜைக்கரண்டி ஆலிவ் எண்ணெய் எடுத்துக் கொள்ளவும். இதனை ஒரு கிண்ணத்தில் கலந்து ஃபேஸ் பேக்கை தயாரிக்கவும். பின் இதனை முகம் மற்றும் கழுத்தில் தடவி 20 நிமிடங்கள் கழித்து சுடுநீரில் கழுவிவிடவும்.

**கடலை மாவு, மஞ்சள் பொடி மற்றும் க்ரீன் டீ**

ஒரு கிண்ணத்தில் 2 மேஜைக்கரண்டி கடலை மாவு, ஒரு மேஜைக்கரண்டி பால் பவுடர், 2 மேசைக்கரண்டி பொடி செய்த ஓட்ஸ் எடுத்துக் கொள்ளவும். பின் அதில் ரோஸ் வாட்டர் மற்றும் உபயோகித்த க்ரீன் டீ பையில் இருந்த இலைகள் ஆகியவற்றை சேர்க்கவும். இவற்றை பசை பதத்தில் வருமாறு நன்றாக கலந்து கொள்ளவும். பின்னர் முகத்தில் தடவி 20 நிமிடங்கள் கழித்து கழுவவும்.

**பாதாம் எண்ணெய் மற்றும் எலுமிச்சை சாறு**

மேஜைக்கரண்டி தேன், ஒரு மேஜைக்கரண்டி பால் பவுடர் மற்றும் அரை மேஜைக்கரண்டி பாதாம் எண்ணெய் ஆகியவற்றை எடுத்துக் கொள்ளவும். இவை அனைத்தையும் ஒரு கிண்ணத்தில் கலந்து பசை போலாக்கவும். இதனை முகம் மற்றும் கழுத்தில் தடவி 20 நிமிடங்கள் ஊற வைத்து கழுவவும். இதனை தினமும் பயன்படுத்தி வந்தால், சன் டானில் இருந்து விடுபடலாம்

**தேன் மற்றும் எலுமிச்சை சாறு**

பால் பவுடரில் தேன் மற்றும் எலுமிச்சை சாறு கலக்கவும். இதனை பசை பதத்திற்கு கொண்டு வரவும். அதை முகம் மற்றும் கழுத்தில் தடவி, குறைந்தது 20 நிமிடங்கள் வரை காய வைக்கவும். பின்னர் குளிர்ந்த நீரால் கழுவவும், இது ஒரு சிறந்த சரும வெண்மைக்கான ஃபேஸ் பேக் ஆகும். இதனை தினமும் பயன்படுத்தலாம்.






**அடுத்து குற்றம் இழைத்தவர்கள் கூட்டுச் சேர்ந்து அக் குற்றத்தை இழைக்கும் போது அக் கூட்டத்தில் யாதாயினும் ஒருவர் காவல்துறைக்கு தாமே அக்குற்றத்தை இழைத்ததாக ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கும் போது குற்றவாளிகள் வேறு வழியின்றிக் குற்றத்தை........**

ஒப்புக்கொண்டு விடுவார்கள். இவ்விரண்டு நிலைகளையும் விடுத்து மூன்றாவது விடயமாக இருப்பது குற்றச் சான்றுகளே.....

கேதீஸ்வரனுடைய கொலை நடந்த போது கண்கண்ட சாட்சியங்கள் எவருமில்லை. ஆனால் அவ்விடத்தில் கொலைஞர்கள் எனச் சந்தேகிக்கிப்படும் இரண்டு புதிய மனிதர்களைக் கண்ட சாட்சியாக இருப்பது கேதீஸ்வரனைக் கடைசியாக தொடருந்து நிலையத்தில் கொண்டு சென்று விட்டு வந்த அவனது நண்பனே.

ஏனைய எவரும் கொலைச்சந்தேக நபர்களைக் கொலை நடந்த இடத்தில், கொலை நடந்த நேரத்திற்கு அண்மைய மணித்தியாலங்களிற் காணவில்லை.

கேதிஸின் நண்பனது சாட்சி மட்டுமே உறுதியானதாக இருப்பது போல அப்போது புலனாய் வாளர்களுக்குப் பட்டது. ஏனையவை யாவும் தடயங்களாகவே அக்கணத்தில் புலனாய்வாளர்களிடம் இருந்தது. எனினும் அத் தடயங்களின் அடிப்படையில் கொலைச்சந்தேக நபர்களுக்கும் கொலைக்கும் நெருங்கிய தொடர்பிருப்பதை அவர்கள் தெரிந்து கொண்ட பின்னரே அவர்கள் இருவரையும் இன்று கைது செய்து திருகோணமலைக்கு அழைத்து வந்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இனி இவர்கள் தானா? அவர்கள் என்பதை ஆதாரம் செய்யும் முகமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டிய கடமைகள் புலனாய்வாளர்களின் முன் விரவிக் கிடந்தது.

அன்று ஜூன் மாதம் 6ம் திகதி, 2012ம் ஆண்டு. மாலை மீண்டும் விசாரணைகளைத் தொடக்கி, ஆரம்பக் கட்ட விசாரணைகளின் ஊடாக கொலை நடந்த திகதிகளில் கொலைச் சந்தேக நபர்கள் இருவரும் திருகோணமலை யில் தங்கியிருந்ததை புலனாய் வாளர்கள் ஐயந் திரிபுற உறுதிப்படுத்திக் கொண்டனர்.

அடுத்து புலனாய்வாளர்களுக்கு கொலை நடந்த அற்றைய இரவில் இவர்கள் தான் திருகோணமலையில் இருந்தவர்கள் என்பதை உறுதிப்படுத்தத் தேவையாக இருந்தது.

அவ்வுறுதிப்படுத்தலைச் சரியாக செய்யக்கூடியவர் கேதீஸ்வரனின் நண்பன் மட்டுமே என அந் நேரத்தில் புலனாய்வாளர்கள் எண்ணங் கொண்டிருந்தனர். ஆனால் இக் கொலைச் சந்தேகநபர்கள் திருகோணமலையில் தான் கொலை நடந்த நேரத்தில் இருந்தார்கள் என்பதை உறுதிப்படுத்தக்கூடிய மேலும் இருவர் உண்மையில் இருப்பது அப்போது புலனாய்வாளர்களுக்குப் புலனாகவில்லை.

06ம் திகதி பின்னிரவில் விசாரணைகள் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டன. கைது செய்து 24 மணி நேரத்திற்குள் நீதிமன்றில் முன்நிலைப் படுத்தப்பட வேண்டும் என்ற மனித உரிமைச்சட்டம் காவல்துறையினரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளைத் துரிதப்படுத்தயிருந்தது.

காவல்துறைக் கூண்டுகளில் தமது அன்றைய இரவினைக் கழித்த அலிகவிற்கு, [illegible] தொடர்பு [illegible] கிடைக்கவில்லை. ஏனெனில் அவர்கள் இருவரையும் தனித்தனியாகவே தடுப்பிலிட்டிருப்பதுடன் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தும் வரை அவர்கள் இருவரையும் தனித்தனியாகவே வைத்திருப்பது என்னும் எண்ணக் கருவை கடுமையாகச் செயற்படுத் தியிருந்தனர்.

தாம் கைது செய்யப்படும் வரை கொலைச் சந்தேக நபர்கள் இருவரும் அவ்வாறு நடைபெறும் என முன்கூட்டியே எதிர்பார்த்திருக்க மாட்டார்கள் என்பதுடன் அவர்கள் இருவரும் அவ்வாறு தாம் மாட்டிக்கொள்ள மாட்டோம் என நம்பிக் கொண்டிருக்க வேண்டும் என புலனாய்வாளர்கள் எதிர்பார்த்தார்கள்.

அவ்வாறு சந்தேக நபர்கள் முன்னமே சந்தித்து இவ்விடயம் தொடர்பாகப் பேசி இருந்தால், தாம் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டால் எவ்வாறான விடைகளை அளிக்க வேண்டும் என்பதையும் திட்டமிட்டிருப்பார்கள்.

உண்மையில் ஆரம்பக்கட்ட விசாரணைகளை சந்தேகநபர்கள் மீது ஒருவர் பின் ஒருவராக காவல்துறை ஆரம்பித்த போது அவர்கள் இருவரும் ஒரே கேள்விக்கு முரணான பதில்களைத் தெரிவித்திருந்தனர். அதனடிப்படையில் தாம் கைது செய்யப்படுவதைப் பற்றியும், அதன் பின்னர் நடைபெறப் போகும் விசாரணைகள் பற்றியும் அவர்கள் இருவரும் அலட்டிக்கொண்டதாகத் தெரியவில்லை என்பது புலனானது.

அதனால் விசாரணைகள் முடியும் மட்டும் அவர்களைத் [illegible] பெறுவது என்ற முடிவில் புலனாய்வாளர்கள் இருந்தனர்.

ஆரம்பக்கட்ட விசாரணைகளில் கொலை நடந்த போது திருகோணமலையில் அவர்கள் தங்கியிருந்த விடயத்தை மட்டும் புலனாய்வாளர்கள் அவ்விரு சந்தேகநபர்களளின் வாயில் இருந்தும் எடுக்கவில்லை. அதற்கும் மேலாக அவர்கள் எங்கே தங்கியிருந்தார்கள் என்ற தகவலையும் கொலைச் சந்தேகநபர் உளறியிருந்தனர்.

அன்று 07ம் திகதி ஏப்ரல் மாதம் , 2012ம் ஆண்டு.... காலை 9 மணியளவில. காவல்துறை அலுவலகத்திலிருந்து ஜூப் வண்டியொன்று மெதுவாக நகர்ந்தது. நீதிமன்றத்திற்குச் சமூகம் அளிப்பதற்காக அவ் வண்டியினுள் குற்றப்புலனாய்வுத் திணைக்கள காவல்துறைப் பரிசோதகரும் மேலும் மூவரும் இருந்தனர்.

நீதிபதியின் முன் இக் கொலை வழக்கு அன்றைய திகதியில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. 7ம் திகதியே முதன் முதலாக கொலைச்சந்தேக நபர்கள் இருவரையும், நீதிமன்றில் முன்னிலைப்படுத்த முடிந்தது. அன்றைய தினமே இரண்டு முக்கிய விடயங்களுக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

முன்னிலைப்படுத்தப்பட்ட சந்தேக நபர்களை மருத்துவப் பரிசோதனைக்கு உடனடியாக உற்படுத்துமாறும், இரண்டாவதாக மேலதிக விசாரணைகளைச் செய்ய முன்னர் சந்தேக நபர்களை அடையாளம் காட்டும் அணிவகுப்பு ஒன்றை நடாத்துமாறும் உத்தரவிட்டார்.

மீண்டும் வழக்கை அடுத்துவரும் 20ம் திகதிக்கு நீதிபதி ஒத்திவைத்தார்.

அன்றைய தினம் மதியம் 2 மணிக்குக் குற்றவாளிகள் இருவரும் தகுந்த பாதுகாப்புடன் பொதுவைத்திய சாலையில் மருத்துவப் பரிசோதனைக்காக... (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு முரசு

## ஆரையம்பதி செயலகம் சம்பியன்

மட்டக்களப்பு மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான மென்பந்து கிரிக்கட் போட்டியில் ஆரையம்பதி பிரதேச செயலகம் சாம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டது. ஆரையம்பதி சாண்டோ சங்கரதாஸ் மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப்போட்டியில் ஆரையம்பதி பிரதேச செயலகமும் மண்முனை வடக்கு பிரதேச செயலகமும் மோதிக்கொண்டன. நிர்ணயிக்கப்பட்ட 10 ஓவர்களில் முதலில் துடுப்பெடுத்தாடிய மண்முனை வடக்கு பிரதேச செயலக அணி 62 ஓட்டங்களைப்பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஆரையம்பதி அணி 9.5 ஓவர்களில் 64 ஓட்டங்களைப்பெற்று வெற்றயீட்டியது. மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கே.பாஸ்கரன் மற்றும் மாவட்ட விளையாட்டு அதிகாரி எஸ்.ஈஸ்வரன் ஆரையம்பதி பிரதேச செயலாளா கே.வாசுதேவன் ஆகியோர் பிரதம அதிதிகளாள கலந்து கொண்டு





## உதைபந்தாட்ட வீரர்களுக்காக சீருடை வழங்கி வைப்பு

சாய்ந்தமருது பிளையிங் ஹோர்ஸ் விளையாட்டுக் கழக உதைபந்தாட்ட வீரர்களுக்காக றெயின்போ எக்றோ சர்வதேச கம்பனியினால் சீருடை வழங்கி வைக்கும் நிகழ்வு சாய்ந்தமருது நடைபெற்றது. கடற்கரை வீதியில் அமைந்துள்ள மர்ஹூம் பௌஸி ஞாபகார்த்த விளையாட்டு மைதானத்தில் பிளையிங் ஹோர்ஸ் விளையாட்டுக் கழகத்தின் பிரதித்தலைவரும், கல்முனை மாநகர சபை உறுப்பினருமான ஏ.ஏ.பஷீர் தலைமையில் புனித ஹஜ்ஜுப்பெருநாள் தினமான புதன்கிழமை (16) நடைபெற்றது. இந்நிகழ்வின்போது கழகத்தின் சிரேஷ்ட வீரரும், தொழிலதிபருமான ஏ.எல்.அமீர்அலி (ஜெலீஸ்) கிரிக்கெட் வீரர்களுக்கான சீருடையினை வழங்கிவைத்தார். இதேவேளை, றெயின்போ எக்றோ சர்வதேச கம்பனியின் முகாமைத்துவப் பணிப்பாளர் எம்.எம்.ஏ.அஸீஸ் உதைப்பந்தாட்ட வீரர்களுக்கான சீருடையினை வழங்கிவைத்தார்.

## பூப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் பென்ஜா கிசோக் சம்பியன்


மட்டக்களப்பு மாவட்டத்தில் நீண்ட இடைவெளிக்குப்பின்னர் நடாத்தப்பட்ட பூப்பந்து சுற்றுப்போட்டியில் தனிநபர் போட்டித் தொடரில் சி.சீலனும் இரட்டையர் ஆட்டத்தில் பென்ஜா மற்றும் கிஸோக் ஆகியோரும் சாம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டனர். ஆரையம்பதி ஏசியன் விளையாட்டுக்கழகம் ஏற்பாடு செய்த பூப்பந்து சுற்றுப்போட்டி ஆரையம்பதி பூப்பந்து அரங்கில் நடைபெற்றது. தனிநபர் மற்றும் இரட்டையர் ஆட்டங்களில் மொத்தம் 42 போட்டிகள் இடம்பெற்றன. தனிநபர் ஆட்டத்தில் இறுதிப்போட்டியில் சீலன் மற்றும் ரமணன் ஆகியோர் மோதிக்கொண்டனர். இதில் 2:0 என்ற அடிப்படையில் சீலன் வெற்றிபெற்றார். இரட்டையர் ஆட்டத்தில் பென்ஜா மற்றும் கிசோக் ஆகியோர் சீலன் மற்றும் வரதன் ஆகியோருடன் மோதிக்கொண்டனர். இதில் பென்ஜா—கிசோக் ஆகியோர் வெற்றிபெற்று சாம்பியன் கிண்ணத்தை தட்டிக்கொண்டனர்.



## முடிவுத் திகதி நீடிக்கப்பட்டுள்ளது

திருகோணமலை நகர லியோ கழகத்தால் நடாத்தப்பட்ட "லியோ சித்திரப் போட்டிக்கான முடிவுத் திகதி பெற்றோர்களின் வேண்டுகோளுக்கு அமைவாக 30.11.2013 வரை நீடிக்கப்பட்டுள்ளது. நீங்களும் பங்கு பெற்ற விரும்பினால் உங்கள் ஆக்கங்களை விரைவாக அனுப்பி வைக்கவும். அனுப்ப வேண்டிய முகவரி செயலாளர், திருகோணமலை நகர லியோ கழகம், இல 159A, கடல் முக வீதி இரண்டாம் மாடி திருகோணமலை. முதலாம் இரண்டாம் இடத்தை பெறுபவர்களுக்கு பதக்கங்களும் பங்கு பெற்றும் அனைவருக்கும் சான்றிதழ்களும் வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது..



திருகோணமலை மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் தலைவர் தி.பிரபாதரன் எடுத்த முயற்சி காரணமாக ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத்தினால் எகாம்பரம் விளையாட்டு மைதானத்தில் பயிற்சி ஆடுகளம் அமைக்கப்பட்டு வருகின்றதை படத்தில காணலாம்.

## போர்ட் இன் பணியைத் தொடர வேண்டும்: ஜெயசூரிய



இலங்கை தேசிய அணியின் புதிய பயிற்றுவிப்பாளரை இலங்கை கிரிக்கெட் சபை தேடிக் கொண்டுள்ள நிலையில், புதிய பயிற்றுவிப்பாளராக நியமிக்கப்படவுள்ளவர் தற்போதைய பயிற்றுவிப்பாளரான கிரஹம் ∴போர்டின் பணியைத் தொடர்ந்தும் செய்ய வேண்டும் என இலங்கை அணியின் முன்னாள் வீரரும், தற்போதைய பிரதம தேர்வாளருமான சனத் ஜெயசூரிய தெரிவித்துள்ளார். 2012 ஆம் ஆண்டு ஜனவரியில் இலங்கை கிரிக்கெட் அணியின் பயிற்றுவிப்பாளராக நியமிக்கப்பட்ட கிர□ம் ∴போர்ட் இற்கு இரண்டு வருடங்களுக்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. இதன்படி, அவரது ஒப்பந்தம் அடுத்த வருடம் ஜனவரியோடு நிறைவடையவுள்ளது. இந்நிலையில், தனது ஒப்பந்தத்தை நீட்டிக்கொள்ள விரும்பவில்லை என கிரஹம் ∴போர்ட் இலங்கை கிரிக்கெட் சபைக்கு அறிவித்திருந்தர். தனது குடும்பத்தினருக்காக இந்த முடிவை எடுத்துள்ளதாக அவர் அறிவித்திருந்தார். இதனையடுத்து புதிய பயிற்றுவிப்பாளரை இலங்கை கிரிக்கெட் சபை தேடி வருவதுடன், 11 விண்ணப்பங்களைப் பெற்றிருந்தது. ஆனால் மேலதிக விண்ணப்பங்களை ஆராய்வதற்காக ரஞ்சித் பெர்ணான்டோ தலைமையில் செயற்குழுவொன்று அமைக்கப்பட்டதோடு. அக்குழுவில் சனத் ஜெயசூரியவும் காணப்படுகிறார். இந்நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள சனத் ஜெயசூரிய, புதிய பயிற்றுவிப்பாளர் பதவியேற்றவுடன் அனைத்தையும் புதிதாக ஆரம்பிக்காமல், தற்போதைய பயிற்றுவிப்பாளர் கிரஹம் ∴போர்ட் விட்டுச் சென்ற இடத்திலிருந்து ஆரம்பிக்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

## முரளி இல்லை

கிரிக்கெட்டின் பைபிள் என அழைக்கப்படும் விஸ்டன் சஞ்சிகை உலகின் பதினொருவர் அணியை அறிவித்துள்ளது. அந்தச் சஞ்சிகையின் 150ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் விதமாக இந்த உலக பதினொருவர் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. அறிவிக்கப்பட்டுள்ள உலகப் பதினொருவரில் இலங்கை வீரர்கள் எவரும் இடம்பெற்றிருக்கவில்லை. அதிக டெஸ்ட் விக்கெட்டுக்களைக் கைப்பற்றி உலக சாதனைகளுக்குச் சொந்தக்காரராக உள்ள இலங்கையின் முத்தையா முரளிதரன் இதில் இடம்பெறாததோடு, அவரது போட்டியாளரான அவுஸ்திரேலியாவின் ஷேன் வோண் இந்த பதினொருவர் அணியில் இடம்பெற்றுள்ளார். அறிவிக்கப்பட்டுள்ள பதினொருவர் அணியின் தலைவராக துடுப்பாட்ட ஜாம்பவான் டொனால்ட் பிரட்மன் அறிவிக்கப்பட்டுள்ளார். இந்தப் பதினொருவரில் 4 இங்கிலாந்து வீரர்களும், 3 மேற்கிந்தியத் தீவுகள் வீரர்களும், 2 அவுஸ்திரேலிய வீரர்களும், தலா ஓர் இந்திய, பாகிஸ்தானிய வீரர்களும் இடம்பெற்றுள்ளனர்.

**அறிவிக்கப்பட்டுள்ள பதினொருவர் அணி:**

ஜக் ஹொப்ஸ் (இங்கிலாந்து), டபிள்யூ.ஜி.கிறேஸ் (இங்கிலாந்து), டொனால்ட் பிரட்மன் (அவுஸ்திரேலியா), சச்சின் டெண்டுல்கர் (இந்தியா), விவியன் றிச்சர்ட்ஸ் (மேற்கிந்தியத் தீவுகள்), கரி சோபர்ஸ் (மேற்கிந்தியத் தீவுகள்), அலன் நொட் (இங்கிலாந்து), வசீம் அக்ரம் (பாகிஸ்தான்), ஷேன் வோண் (அவுஸ்திரேலியா), மல்கொம் மார்ஷல் (மேற்கிந்தியத் தீவுகள்), சிட்னி பார்ன்ஸ் (இங்கிலாந்து)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மிகை வருமானத்திற்கு வரி

இலங்கையில் பேரளவு வருமானத்தை உழைக்கும் பெருந்தன வந்தர்களுக்கு எதிர்வரும் மாதம் அதிர்ச்சி தரக் கூடிய தாக அமையலாம். ஏனெனில் எதிர்வரும் மாதம் அறிமுகப்படுத்தப் படவுள்ள இலங்கை யின் 2014ம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் பெருந்தனவந்தருக்குப் புதிய வரிவீத மொன்றை அரசு முன்வைக்கவுள்ளது. இதற்கென தனவந்தர்களின் வருமானமும் சொத்துக் களுமே கருத்திற் கொள்ளப்படவுள்ளது.

## மாலைதீவில் காவல்துறை தேர்தலை நிறுத்தியது

மாலைதீவில் இரண்டாவது முறையாக மீண்டும் தேர்தலை நிறுத்தியுள்ளது அந் நாட்டு காவல்துறை மாலைதீவில் நீதித் துறைக்கும் அரசத்துறைக்கும் இடையே எழுந்துள்ள கடும் இழுபறி நிலையை அடுத்து தேர்தலை நடாத்து வதற்கு காவல்துறை

**the SUNDAY TIMES**

தடைகளை ஏற்படுத்தி வருகின்றது. தேர்தல் ஆணையாளரின் அலுவலகத்திற்குச் சென்ற காவல் துறையினர் அங்கிருந்து தேர்தல் ஆவணங்கள் வெளிச்செல்வதை தடுத்து ள்ளதுடன் மீயுயர் நீதிமன்ற உத்தவிற்கு அமையவே தாம் இவ்வாறு செயற்படுவதாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நிதிக்கம்பனியின் சூனல்களை நிமிர்த்து வதற்கு புதிய விதிகள்

தமது கம்பனியின் பணிப்பா ளர்கள், மற்றும் அவர்களின் உறவினர்க ளுக்கு வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் குத்தகைகளை நிதிக்கம்பனிகள் தன்னிச் செயலாகப் பதிவழிப்புச் செய்யும் நடவடிக்கைகளை மத்தியவங்கி இடை நிறுத்தியுள்ளது. அத்துடன் மேலும் பல புதிய நடைமுறைகளை நிதிக் கம்பனிகள் சார்பாக மத்திய வங்கி அறிமுகப்ப டுத்தியுள்ளது.

ஏற்கனவே அறிமுகம் செய்யப் பட்ட ஒழுங்கு நடைமுறைகளை நிதிக் கம்பனிகள் பின்பற்றாமல் விட்டதனா லேயே அண்மையில் சென்றால் இன்பெஸ்ட் மென்ட் அன்ட் பினான்ஸ் கம்பனி உடைந்துள்ளது என சில வட்டா ரங்கள் தெரிவித்துள்ளன.

## வான்தளக் காவல்துறை அலுவலகம் மூடப்பட்டது

பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலைய வான்தளக் காவல் நிலையம் திடீரென அகற்றப்பட்டுள்ளது. மிகமுக்கிய யமானவர்கள் (VIP) வருகை தரும் சர்வதேச விமான நிலைய வாசலின் எதிர்ப்புறமாக அமைந்திருந்த காவல் துறை அலுவலகமே இவ்வாறு திடீரென மூடப்பட்டுள்ளது.

இக் காவல் நிலையம் ஏன் மூடப்படுகின்றது என்பதற்கு காவல்துறையும் வான்தள அதிகா ரசபையும் முன்னுக்குப் பின் முரணான செய்திகளையே தருகின்றன. பொது நலவாயக் தலைவர்களின் மகாநாட்டுக்கு சில நாட்கள் இருக்கையில் இவ்வாறு காவல்துறை அலுவலகம் மூடப்படுவது குறிப்பிடத்தக்கது.

## ஈரான் எண்ணை 3ம் நபர் ஊடாக இலங்கைக்கு

ஈரானின் எண்ணையை இலங் கையை வாங்க வேண்டாம் என விதிக்கப் பட்டுள்ள தடையையும் மீறி இலங்கை ஈரானிய எண்ணையை 3ம் நபர் ஊடாக கொள்வனவு செய்ய முயற்சி நடப்பதாக சந்தேகம் எழும்பியுள்ளது.

மார்கோ ஜெனரல் டிரேடிங் பி.எல்.சி என்ற பெயரஜல் இயங்கும் கம்பனியை எண்ணை வழங்குனராக இலங்கை பெற்றோலிய கூட்டத்தாபனம் நியமனம் செய்துள்ளது.

இவ் வழங்குனரிடமிருந்து கட்டளை இடப்பட்டுள்ள ஒரு கப்பல் எண்ணை வரவிருப்பதாக தெரிகின்றது. இக் கப்பலின் பதிவு தொடர்பாக பின்ப ற்றப்பட்டுள்ள நடைமுறைகளினாலேயே சந்தேகம் எழுந்துள்ளது.

**SUNDAY OBSERVER**

Sri Lanka's English Newspaper with the largest circulation

## வைத்தியசாலையில் இலவசபால்

அரச வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டிருக்கும் நோயாளி களுக்கு இலவசமாக பால் வினியோகி க்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. ஆரம்பக் கட்ட பரீட்சா ர்த்த நடவடிக்கையாக பால் வினியோ கமானது தெரிவு செய்யப்பட்ட சில வைத்தியசாலைகளில் மிக விரைவில் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் தெரிய வந்துள்ளது. பின்னர் படிப் படியாக அனைத்து வைத்தியசாலைக ளுக்கும் விரிவாக்கப்படும் என அரச வைத்தியம் சங்கம் தெரிவித்துள்ளது.



## இரு நாட்டுக் குடியுரிமை சட்ட வரைபு பிந்தும்

எதிர்பார்க்கப்பட்டு கொண்டி ருக்கும் இரு நாட்டுக் குடியுரிமை தொடர்பான சட்டவரைவு இன்னும் பல நாட்கள் பிந்தும் எனத் தெரிகின்றது. கடந்த ஒரு வருடங்களாக இழுபறியில் உள்ள இந்த இரு நாட்டுக் குடியுரிமைச் சட்ட வரைவு இழுபறியில் குடிவரவு - குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் பெரும் பிரச்சனைகளை எதிர்கொண்டு வருகின்றன.

## கடலில் அத்துமீறுதல் நாடுகளிடையே இணக்கப்பாடு

சர்வதேச கடற்பரப்பைத் தாண் டிச் மறு நாட்டின் கடற் பரப்பினுள் நுழைந்து மீன்பிடிப்பவர்கள் தொடர்பான பிரச்சனையை இந்தியாவும் இலங்கை யும் தாமே தம்மிடையே தீர்த்துக் கொள்ளும் உடன்பாட்டை எட்டியுள்ளன.



இப்பிரச்சினையும் திர்ப்பதற்கு 3ம் நபர்களின் தேவையில்லை என நாடுகள் இரண்டும் பேச்சுக்களின் பின் தெரிவித் துள்ளன.

## ஐக்கிய தேசியக் கட்சிக்குள் தீர்க்கப்படாத பிரச்சினை

ஐ.தே.கட்சிக்கிடையே உள்ள பிரச்ச னைகளை தீர்த்துக் கொள்வதற்கு எவராலும் முடியாதிருப்பதாக தெரிகின்றது கடந்த வாரம் ஐக்கிய பிக்கு முன்ன ணியின் தலைவர் வணக்கத்துக்குரிய குரம்பே ஆனந்த தேரர் முயன்றுள்ளார் ஆரம்பத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்து வத்திற்குக் குழுவொன்றை உருவாக்க வேண்டும் என்ற நோக்குடன் நாடாத்தப்பட்ட பேச்சுக்கள் கூட முடிவுகள் எதுமின்றி நிறைவுற்றுள்ளது. மீண்டும் எதிர்வரும் வாரம் இக் கூட்டம் தொடரவுள்ளது.

ஐ.தே.க வின் உயர்மட்டக் குழுவின் செய்பாடுகள் தொடர்பாக பெரும் கண்டனங்கள் எழுந்துள்ளன. அதனைத் தொடர்ந்து சிரேட்ட ஐ.தே.க உறுப்பினரான காமினி ஜெயவிக்கிரம பெரேரா ஐ.தே.கவின் முதல்வர் பதிவிலி ருந்து கீழிறக்கப்பட்டுள்ளார்.

## சியோலில் இலங்கையின் அபிவிருத்தி தொடர்பான ஆய்வு


ஜப்பானிய வெளிவிவகார அமைச்ச ருடன், இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி தொடர்பாக அமைச்சர் ஜி.எல் பீரிஸ் கலந்தாலோசித்துள்ளாரர். அத்துடன் இரு நாடுகளுக்கும் இடையே மேலும் பொருளாதார அபிவிருத்தித் தொடர்புகளை இறுக்கமாக்கிக் கொள் வதற்கு ஏற்ற நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்தா லோசிக்கப் பட்டுள்ளது

## தங்காலை கொலை வழக்கு விசாரணைத் திகதி அறிவிக்கப்படலாம்.

டிசம்பர் 2011ல் தங்காலையில் கொலை செய்யப்பட்ட பிரித்தானிய பிரஜயின் கொலை தொடர்பான மேல் விசாரனைக் கான திகதியை கொழும்பு மேல் நீதி மன்றம் தீர்மானிக்கவுள்ளது. கடந்தவாரம் அந்ரோணி ஜெனரல் திணைக்களம் இவ் வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட தங்காலை பிரதேசசபை தலைவர் உட்பட ஏனைய சந்தேநபர்களிற்கு எதிரான குற்றப்பத்தி ரத்தை மேல் நீதிமன்றில் தாக்கல் செய்வதை அடுத்து விசாரணைத் திகதியை நிர்ணயிக்கும் நடவக்கையை மேல் நீதிமன்றம் இவ்வாரத்தில் எடுக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## ஐக்கிய இராச்சியத்திலிருந்து திருப்பியனுப்பட்டவர்களின் நிலை என்ன?

இலண்டனில் இருந்து நாடு கடத்தப்பட்ட இலங்கைத் தமிழரின் நிலை எவ்வாறுள்ளது என்பதை அறிந்துள்ளீர் களா என பிரித்தானிய வெளிவிகார அமைச்சின் ஆலோசனைக் குழு பிரித்



தானிய எல்லை முகவர் நிலையத்திடம் கேள்வி எழுப்பியுள்ளது. நாடுகடத்தப்பட்டவர்களின் தற் போதைய நிலையினை அறிந்து கொள்வது ஐக்கிய இராச்சிய வெளிவி காரக் கொள்கைகளின் சரத்துக்களில் ஒன்றாகும்.

## இலங்கையின் தனியார் துறையிடமிருந்து பறிபோகும் மீன் சுழற்சி மின் உற்பத்தித் திட்டங்கள்



இலங்கையின் தனியார் துறைக்கு வழங்கப்படவிருந்த புதுப்பிக்க கூடிய மின் உற்பத்தித் திட்டங்களை இரகசியமாக சர்வதேச நிறுவமொன்று தனதாக்கிக் கொண்டுள்ளமை தெரிய வருகின்றது. இத் நிறுவனமானது வாகன உற்பத்தியில் இயங்கும் பாரிய நிறுவ னமாகும்.

சிறிய மற்றும் நடுத்தர அளவி லான 450 மெகாவாட்டு நீர் மின்வலு மற்றும் காற்றாலை மின்வலுத் திட்ட ங்களே இவ்வாறு களவு போயுள்ளது. இத் திட்டங்களுக்கான இடங்கள் தேர்வு செய்யப்பட்டு சாத்திய அறிக்கைகளும் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள நிலையில் இத் திட்டத்திற்கு கடனுதவி அளிக்க வந்த சீனக்கம்பனியொன்று இச் சிறிய திட்டங்கள் யாவற்றையும் ஒன்றாகப் பெற்றுள்ளதாகத் தெரிகின்றது.

**The Sunday LEADER**

## உல்வாசவிடுதிகள் அனைத்தும் முன்பதிவு

பொதுநலவாயத் தலைவர்களின் மகாநாட்டை அடுத்து கொழும்பிலுள்ள உல்லாசவிடுதிகளின் அறைகள் யாவும் முன்பதிவு செய்யப்பட்டுள்ளன. கொழும்பில் 4000 அறைகளிலும் கொழும்பிற்கு வெளியே மேலும் பல அறைகளும் முன்பதிவு செய்யப்பட்டு விட்டன.

## பொதுநலவாயத் தலைவர்களுக்கு ஐ.தே.க விளக்கம்.

எதிர்வரும் மாதம் இலங்கையில் கூடவுள்ள பொதுநலவாயத் தலைவர் களுக்கு இலங்கையின் தற்போதைய நிலை தொடர்பாக விளக்க மளிக்க ஐ.தே.க தயாராகி வருகின்றது.

நா. உறுப்பினர் மங்கள சமரவீ ரவின் கைதை அடுத்து பொதுநலவாயக் கூட்டத் தொடரின் பிரதான கூட்டத்தைப் புறக்கணிக்க முடிவு எடுத்துள்ள ஐ.தே.க இலங்கையில் நடைபெறும் மனித உரிமை மீறல்களான கடந்தல்கள் கொலைகள் மற்றும் முன்நாள் பிரதம நீதியரசரின் பதவி பறிப்பு போன்றவை தொடர்பாகவும் பொதுநலவாயத் தலைவர்களுக்கு விளக்கம் அளிக்க உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விமுரசு

## க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல்

### பாடம் - விஞ்ஞானம், 10

பகுதி 01

01. வளியில் எரிக்கப்பட்டால் மூல இயல்புகளைக் கொண்ட வெள்ளை நிறத் தூளைப் பெற்றுத்தரக்கூடிய மூலகம் பின்வருவனவற்றில் எது?
   1. செப்பு 2. அலுமினியம் 3. மக்னீசியம் 4. இரும்பு
02. குறைகடத்தி இருவாயி எனப்படுவது பின்வருவனவற்றில் எது?
   1. $n$ வகைக் குறைகடத்தி 2. $p$ வகைக் குறைகடத்தி
   3. $p-n$ சந்தி 4. $p-n-p$ திரான்சிற்றர்
03. சூரியன் உச்சியில் இருக்கும் போது அம்மு தனது மேசையின் மேற்பரப்பின் வழியே செல்லும் ஒளிக்கற்றை ஒன்றைப் பெறவேண்டியிருப்பின், அக்கற்றையைத் தெறிக்கச் செய்வதற்கு தள ஆடி ஒன்றைத் தரையின் தளத்துடன் எந்தக் கோணத்தில் சாய்த்து வைத்தல் வேண்டும்?
   1. 90° 2. 45° 3. 60° 4. 75°
04. ஆவர்த்தன வழியாகச் செல்லும் போது
   1. அயனாக்கல் சக்தி குறையும் 2. மின்னேர்த் தன்மை கூடும்
   3. உலோக இயல்பு கூடும் 3. அணு ஆரை குறையும்
05. சோடா போத்தலைத் திறக்கும் போத்தலிலுள்ள சோடாவில் இருந்து குமிழிகளாக வெளிவரும் வாயு எது?
   1. ஓட்சிசன் 2. காபனீரொட்சைட்டு 3. நைதரசன்
   4. ஐதரசன்
06. ஓட்சிசன் ஏற்றிய குருதியைக் கொண்டு செல்லும் நாளம் எது?
   1. முற்பக்கப் பெருநாளம் 2. பிற்பக்கப் பெருநாளம்
   3. சுவாசப்பை நாளம் 3. ஈரல்வாயி நாளம்
07. 6, 12, 17, 20 ஆகிய அணுவெண்களைக் கொண்ட மூலகங்களில் ஒரே ஆவர்த்தனத்தைச் சேர்ந்த மூலகங்களின் அணுவெண்கள் யாவை?
   1. 6 உம் 12 உம் 2. 12 உம் 17 உம் 3. 17 உம் 20 உம்
   4. 12 உம் 20 உம்
08. மின்காந்த அலை தொடர்பான சரியான கூற்றுக்களைத் தெரிக.
   அ. 300,000 $Km/s$ வேகத்தில் செல்லும்.
   ஆ. குறுக்கலை வடிவத்தில் ஊடுகடத்தப்படும்.
   இ. மின்னின் இயல்பையும் காந்தத்தின் இயல்பையும் கொண்டது.
   1. அ, ஆ சரி 2. ஆ, இ சரி 3. அ, இ சரி
   4. அ, ஆ, இ சரி
09. யாதாயினும் ஒரு பதார்த்தத்தின் தொடர்படர்த்தி 0.8 ஆகும். அதன் அடர்த்தி
   1. $0.8+1000Kgm^{-3}$ 2. $0.8\times1000Kgm^{-3}$
   3. $\frac{0.8}{1000}Kgm^{-3}$ 4. $0.8-1000Kgm^{-3}$
10. மூலம் $X$ இன் அணு ஒன்றின் திணிவு எண் 39 ஆகும். அதன் அணு எண் 19 ஆகும். இம்மூலம் தொடர்பாகப் பின்வரும் எக்கூற்றுக்கள் சரியானவை?
   m . $X$ இன் அணு ஒன்றில் உள்ள புரோத்தன்களின் எண்ணிக்கை 19 ஆகும்.
   ஆ. $X$ இன் அணு ஒன்றில் உள்ள நியூத்திரன்களின் எண்ணிக்கை 39 ஆகும்.
   இ. $X$ இன் அணு ஒன்றில் உள்ள இலத்திரன்களின் எண்ணிக்கை 39 ஆகும்.
   ஈ. $X$ இன் அணு ஒன்றில் உள்ள நியூத்திரன்களின் எண்ணிக்கை 20 ஆகும்.
   1. அ, ஆ சரி 2. ஆ, இ சரி 3. இ, ஈ சரி 4. அ, ஈ சரி

பகுதி 02

01. புவிக் கோளின் மிகவும் சிறிய பிரதேசத்துக்கு வரையறுக்கப்பட்ட உயிர்க்கோளத்தினுள்ளே பல்வேறு ஒழுங்கமைப்பு மட்டங்கள் ஒழுங்காக அமைந்துள்ளன.

1. அ) புவிக் கோளின் எந்தப் பகுதி உயிர்க்கோளமென அழைக்கப்படுகின்றது?
   ஆ) "அங்கிக் குடித்தொகை" என்பதை விளக்குக.

2. சிறிய ஒரு நன்னீர்க் குளத்தை அண்டிக் காணத்தக்க நான்கு இணைப்புக்களைக் கொண்ட ஓர் உணவுச் சங்கிலியை எழுதுக.

3. நீர்ச் சாகியம் ஒன்றில் வாழும் துணை ஊனுண்ணி ஒன்றின் உடலில் சேரும் பீடைகொல்லியின் அளவானது தாவரத்தில் உள்ள பீடைகொல்லியின் அளவின் பல மடங்கு பெரியது. இது நடைபெறும் விதத்தை விளக்குக.

4. சூழலில் நுண்ணங்கிகள் இருக்கின்றன என்பதைக் காட்டுவதற்கு நீர் செய்யத்தக்க செயற்பாடு ஒன்றின் படிமுறைகளை விவரிக்க.

5. இயற்கைச் சுழற்றொகுதியில் பயிரிடும் நிலத்தை உண்டாக்குதல் அதில் நிலவும் இயற்கைச் சமநிலை நகர்வதற்கு ஏதுவாகும் விதத்தை விளக்குக.

6. வன சீவராசிகள் பாதுகாப்பு நிதியத்தின் மூலம் வெளியிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள சுவரொட்டி ஒன்றின் மாதிரி கீழே காணப்படுகின்றது. இச்சுவரொட்டியில் உள்ள "உரித்தான" (*endemic*) என்னும் பதத்தினால் கருதப்படும் விடயங்களை விளக்குக.

கணித, விஞ்ஞான பரீட்சை வழிகாட்டல் ஆசிரியர்
குரு கல்வி நிலையம், சாம்பல் தீவு, புளியன்குளம்.


### பாடம் - கணிதம், 10

பகுதி - 01

01) a) ஒருவர் தனது மாதச் சம்பளத்தில் $^1/_3$ பங்கை உணவிற்கு செலவிடு கின்றார். மிகுதியில் ¼ பங்கை உடைக்காகவும் $^1/_6$ பங்கை போக்குவரத்தி ற்கும் செலவிடுகின்றார். மிகுதியாக ரூ 3500 ஐ சேமிக்கின்றார்.
 i) உடைக்கும் போக்குவரத்திற்கும் செலவு செய்தது முழுவதன் என்ன பங்கு?
 ii) அவரது மாதச் சம்பளம் எவ்வளவு?
 b) காரணிப்படுத்துக. $x^2 - y^2 - 6x + 9$


02) a) பொருள் ஒன்றின் உற்பத்தியின் போது மூலப்பொருளுக்காக ரூபா 250 உம் கூலியாக ரூபா 150 உம் செலவாகியது. உற்பத்தியாளர் அப்பொ ருளை ரூபா 500 இற்கு விற்கிறார். மூலப்பொருள்களின் விலை 20% இனாலும் கூலி 12% இனாலும் அதிகரிக்கிறதெனின் முன்னர் பெற்ற அதே இலாபச் சதவீதத்தைப் பெறுவதற்கு அப்பொருளை என்ன விலைக்கு விற்கப்பட வேண்டும்?
 b) பொருள் ஒன்றை விற்றதில் 5மூ நட்டம் ஏற்பட்டது. அதன் விற்பனை விலை ரூபா 44 இனால் கூடியிருந்தால் இ 3% இலாப த்தைப் பெற்றிருக்க லாம். வியாபாரி அப்பொருளை வாங்கிய விலை யைக் காண்க.

03) ஒரு மாணவியின் B'day பாட்டியில் பங்கு பற்றிய 60 பேர்பற்றிய விபரம் தரப்பட்டுள்ளது.
 வடை சாப்பிட்டவர்கள் 25 பேர்
 கேக் சாப்பிட்டவர்கள் 22 பேர்
 பிஸ்கட் சாப்பிட்டவர்கள் 5 பேர் எனின்,




 i) வடை மட்டும் சாப்பிட்டவர்கள் எத்தனை பேர்?
 ii) கேக்கும் வடையும் சாப்பிட்டவர்கள் எத்தனை போ?
 iii) $V^1 n B^1 n C$ ஐ நிறம் தீட்டி காட்டுக.
 iv) வடைக்கும் பிஸ்கட்டுக்கும் உள்ள தொடர்பு யாது?
 v) கேக் மட்டும் சாப்பிட்டவர்கள் எத்தனை பேர்?

04) a)




 i) தரப்பட்ட உருவின் பரப்பளவு $11.5cm^2$ எனின் $x^2 + 10x - 23 = 0$ எனக்காட்டுக.
 ii) வர்க்க நிறைவர்க்கல் மூலம் தீர்த்து கிட்டிய முதலாம் தசமதானத்திற்கு திருத்தமாக தருக. ( "3 = 1.7எனக்கொள்க

 b) $A = \begin{pmatrix} 3 & 2 \\ 5 & 1 \\ 0 & 7 \end{pmatrix}$ $A + B = \begin{pmatrix} 5 & -3 \\ 4 & 9 \\ 6 & -5 \end{pmatrix}$ எனின்,
 i) தாயம் B இன்வரிசையாது?
 ii) தாயம் B ஐ காண்க.

05) ஒருவர் கூட்டு வட்டி வீதப்படி ஒரு தொகைப் பணத்தைக் கடனாகப் பெற்றார். 2 வருடங்களில் கடனைத் தீர்க்க வேண்டும் எனின் ரூபா24200 உம் 3 வருடங்களில் கடனைத் தீர்க்க வேண்டும் எனின் ரூபா 26620உம் செலுத்த வேண்டும். கடனாகப் பெற்ற பணத்தையும் வருட கூட்டு வட்டி வீதத்தையும் காண்க.

## விடைகள்

| | | |
|---|---|---|
| 01. ரூபா 631.80 | 12. X = 10, Y = 4 | 22. 3/1 |
| 02. N(A¹) = 4 | 13. 20 + 4 | 23. (i) $3.457 \times 10^3$ (ii) 0.0713 |
| 03. $3 = \log_7 343$ | 14. | 24. $150^0$ |
| 04. M - 1 | 15. 2x - 1 | 25. K= (-2 -3 -5 -1) |
| 05. B = 23 | 16. 180 Km | 26. (i) ACB = 90° (ii) அரைவட்ட கோணம் செங்கோணமாகும். |
| 06. 120 | 17. 34Cm | 27. (i) 378 மனிதநாட்கள் (ii) 42 நாள் |
| 07. 210 - x | 18. 22 வது உறுப்பு | 28. கொள்விலை = 300ரூபா |
| 08. 35% | 19. (i) -> x (ii) -2 -1 0 1 2 3 | 29. MDC = 35° |
| 09. 1 1/2 | 20. 241 | 30. 5/4 |
| 10. $\frac{X^2 + Y^2}{XY}$ | 21. a=56° | |
| 11. Y = 50 | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல்

*பயிற்சி 11* *பாடம் - வரலாறு*

01. வரலாறு என்பது புராதன காலம் தொடக்கம் இன்றைய காலம் வரையில் மனிதகுலத்தின் கடந்த காலத்தை பற்றி கற்பது என்ற கூற்றை வெளியிட்டவர்.
   1.ஹெரடோரஸ் 2.ஸ்ருவர்ட் பிகொட் 3.பேர்கஹாட் 4.ஜவகர்லால் நேரு
02. திரிபீடகம் தொகுக்கப்பட்டு எழுத்து வடிவம் பெற்ற இடம்
   1.கல்விகாரை 2.அலுவிகாரை 3.ஜேத்தவனராமய 4.திஸ்ஸமகாராம

**வினா 01**

*2ம் உலகமகாயுத்தத்தில் பேரழிவினை சந்தித்த ஜப்பான் இன்று துரித வளர்ச்சி கண்டுள்ளது.*

1. ஜப்பானின் கைத்தொழில் வளர்ச்சிக் கட்டங்கள் மூன்றையும் தருக.
2. 1947ம் ஆண்டு புதிய யாப்பின் படி பேரரசின் பெயரளவு அதிகாரங்கள் இரண்டை தருக.
3. 1950ன் பின் ஜப்பானின் கைத்தொழில் ரீதியான ஏற்பட்டுள்ள முன்னேற்றத்துக்கு பங்களித்த காரணிகள் இரண்டை சுருக்கமாக விளக்குக.
4. 1945ம் ஆண்டின் பின்னர் ஜப்பானில் பல துறைகள் முன்னேற்றம் கண்டுள்ளது என்பதை கைத்தொழில் துறையின் ஊடாக விளக்குக.

**வினா 02**

*அரசன் தொடக்கம் அடிமட்ட பிரஜை வரை நிலத்தை அனுபவிப்பது தொடர்பாக பொறுப்புக்களுடன் கூடிய ஒரு சமூகம் மானிய முறையாகும்.*

1. ஐரோப்பாவில் மானிய முறை தோற்றத்துக்கு வழிவகுத்த அந்நிய படையெடுப்புக்கள் மூன்றை தருக.
2. நிலமானிய முறையின் பொருளாதார அம்சங்கள் இரண்டை குறிப்பிடுக.
3. மானியமுறை வீழ்ச்சிக்கு பல காரணிகள் வழிவகுத்ததுள்ளன. அவற்றுள் இரண்டை விளக்குக.
4. ஐரோப்பாவின் மறுமலர்ச்சி ஏற்பட வழிவகுத்த காரணிகள் மூன்றை விளக்குக.

**வினா 03**

1. உலக சமாதானத்தை நிலைநாட்ட உருவாக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் காரணகர்த்தாக்களை பின்வரும் அ, ஆ, இ ஒழுங்கில் தருக.
   அ - ஐக்கியஅமெரிக்கா ஆ - பிரித்தானியா இ - ரஷ்யா
2. ஐக்கிய நாடுகள் சபையின் பிரதான அங்கங்கள் இரண்டைக் குறிப்பிடுக.
3. அணிசேரா நாடுகளின் உருவாக்கத்திற்கு ஜவகர்லால் நேரு முன்வைத்த பஞ்சசீலக் கொள்கையில் இரண்டை விளக்குக
4. ரஷ்யாவில் சுதந்திர பொருளாதார கொள்கை அறிமுகம் செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டமைக்கு பங்களித்த காரணிகள் மூன்றை சுருக்கமாக விவரிக்குக.

**வினா 04**

கலிங்க மாகனின் படையெடுப்பின் பின் இராசதனி தென்மேற்கு நோக்கி இடம் பெயர்ந்ததுடன் மக்களின் பொருளாதார,சமூக நடவடிக்கையும் மாற்றம் அடைந்தன

அ. 1. இந்தியாவின் அதிவீர ராம பட்டினத்தை ஆக்கிரமித்தல்
   2. பாண்டிமன்னனுடன் நட்புக்கொண்டு தந்ததாதுவை மீட்டு வந்த மன்னன்
   3. குருணாகலில் அந்துக்கல்புரவை தலை நகராக்குதல்

மேற்படி நிகழ்வுகளுடன் தொடர்புடைய ஆட்சியாளர்களைத் தருக.

ஆ. கம்பளை இராசதானியாக தெரிவு செய்யப்பட்டமையில் பங்களித்த காரணிகள் இரண்டைத் தருக?

இ. 2ம் பராக்கிரம பாகுவின் சமய,அரசியல் பணிகளை சுருக்கமாக விளக்குக.

ஈ. தென்மேற்கு நோக்கி இடம் பெயர்ந்த காலத்தில் இடம் பெற்ற பொருளாதார மாற்றங்களை விவரிக்குக.

**வினா 05**

*கி.பி 1505 இலிருந்து 1796 வரை போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் இலங்கையின் கரையோரத்தை ஆட்சி செய்த காலத்தில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தி சென்றுள்ளார்.*

1. அ - இலங்கைக்கு கி.பி 1505ல் லோரன்சோ த அல்மேடா வரும் போது கண்டியின் ஆட்சியாளன்
   ஆ - 1795ல் இலங்கைக்கு வருகை தந்த றொபட் அன்ரூஸ் என்ற ஆங்கிலேயரை சந்தித்தவன்
   இ - இலங்கையை ஆண்ட இறுதி அரசனாக இருத்தல்

மேலே அ, ஆ, இ என்ற ஒழுங்கில் தரப்பட்டுள்ளவற்றிற்கு பொருத்தமான கண்டி ஆட்சியாளர்களை எழுதுக.

ஆசிரியர் :
**த. அகிலன்,** Dip. in Tech. (Merit)
புனித மரியாள் கல்லூரி ,திருகோணமலை
வெற்றிப்படி ஆசிரியர், ஆறுதல் நிறுவன வரலாற்று பாட ஆசிரியர்

## ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சிகள் - 05

பிரதீபா

1. நீர் வட்டம் எனப்படுவது பின்வருவனவற்றுள் எது?
   1. நீர் வட்டவடிவில் ஓடுதல்
   2. நீர்வீழ்ச்சி ஆறாக ஓடி கடலுடன் கலத்தல்
   3. நீர் ஆவியாகி ஒடுங்கி, மழைமுகிலாகி, மழையாக மீண்டும் நிலத்தை அடைதல்.
2. சூரியனை ஒருமுறை சுற்றிவர 11.87 புவி வருட காலமெடுக்கும் கோள் எது?
   1. புளூட்டோ 2. புதன் 3. வியாழன்
3. 2008 வது வருடம் எத்தனையாம் நூற்றாண்டு?
   1. 20ம் நூற்றாண்டின் பிற்பகுதி 2. 21ம் நூற்றாண்டின் முற்பகுதி
   3. 21ம் நூற்றாண்டின் பிற்பகுதி
4. இவர் "ஸ்ரீபாத" எனும் நூலை வெளியிட்டவர். மக்கள் மாட்டிறைச்சியை உண்பதைத் தவிர்ப்பதற்கு அரும்பாடு பட்டவர். இவரே மருந்து மூலிகைகளைச் சேகரித்து இலவச மருத்துவ சாலையை ஸ்தாபித்தவர். இவர் யார்?
   1. கெப்பட்டிப்பொல திசாவை 2. வண. எஸ் மகிந்த
   3. கொங்காலே கொடபண்டா
5. மஸ்கெலிய ஓயாவில் உற்பத்தியாகி, ஹட்டன் பிரதேசத்தின் ஊடாகச் செல்லும் நீர்வீழ்ச்சி எது?
   1. லக்சபான 2. தியலும 3. துங்ஹிந்த
6. ஒரு கார் 20km செல்வதற்கு 1.5l பெற்றோல் தேவைப்படுகின்றது எனின், 10.5l பெற்றோலில் பயணம் செய்த தூரம் யாது?
   1. 7km 2. 140km 3. 120km
7. "காலையில் சூரியன் கிழக்குத் திசையில் காணப்படும். ஒருவர் காலையில் கிழக்கு நேக்கிச் சென்றால் நிழல் அவருக்குப் பின்னாலும் மேற்கு நேக்கிச் சென்றால் நிழல் அவருக்கு முன்னாலும் விழும்." இக்கூற்று பற்றி யாது கூறுவீர்?
   1. சரி 2. பிழை 3. யாதும் கூறமுடியாது
8. ரூபா 22.50 விலையுள்ள இரு கொப்பிகளும் ரூபா 17 விலையுடைய பேனாக்கள் மூன்றினையும் வாங்கி நூறு ரூபாய்த் தாளைக் கொடுக்கும் போது கிடைக்கும் மீதி எவ்வளவு?
   1. ரூபா 96 2. ரூபா 4 3. ரூபா 21
9. கடிகாரத்தின் நேரம் நான்கு மணியை அடையும்போது நிமிட முள் தென் மேற்குத் திசையில் அமைந்திருக்குமாயின், மணிமுள் எத்திசையைக் காட்டும்?
   1. தென் மேற்கு 2. தென் கிழக்கு 3. கிழக்கு

**கீழுள்ள பாடலைக் கொண்டு 10,11ம் வினாக்களுக்குப் பொருத்தமான விடையினைத் தெரிக.**

மீனினம் ஓடிப் பறக்குதம்மா - ஊடே
வெள்ளி ஓடம் தன்று செல்லுதம்மா
வானுங் கடலுமாக மாறுதம்மா - இந்த
மாட்சியிலுள்ளம் முழுகுதம்மா

10. இங்கு 'வெள்ளி ஓடம்' என்பதன் பொருள்?
   1. வால்வெள்ளி 2. நிலா 3. படகு
11. இப்பாடல் எவ்வேளைக்குரியது?
   1. மதியம் 2. அதிகாலை 3. இரவு
12. ஒளித்தொகுப்பிற்கு உதவும் ஆனால் வித்துமுளைத்தலுக்கு அவசியமில்லாத காரணி எது?
   1. வெப்பம் 2. நீர் 3. சூரியஒளி
13. 150 செ.மீ நீளமுள்ள ஓர் கயிற்றுத் துண்டின் நடுவில் 20 செ.மீ நீளமுள்ள பகுதி சேதமடைந்துள்ளது. அப்பகுதியை அகற்றி மீதி இருதுண்டுகளும் 5செ.மீ வீதம் ஒன்றின் மீது ஒன்று வைத்து ஒட்டப்பட்டன. தற்போது அக் கயிற்றுத் துண்டின் நீளம் யாது?
   1. 130 செ.மீ 2. 120 செ.மீ 3. 125 செ.மீ
14. அதிக நாட்கள் வாடாது இருக்கும் பூ எது?
   1. வாடா மல்லிகை 2. எக்சோரா 3. ஓர்க்கிற்
15. தேயிலை ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம்?
   1. சபுகஸ்கந்த 2. தலவாக்கல 3. அகலவத்தை
16. 6 கிலோ 750 கிராம் சீனியை சமமான ஐந்து பக்கட்டுக்களில் அடைத்தால் ஒரு பக்கட்டில் உள்ள சீனியின் அளவு யாது?
   1. 1 கிலோ 350 கிராம் 2. 1 கிலோ 250 கிராம்
   3. 1 கிலோ 450 கிராம்
17. 3140 நிமிடங்களை நாள், மணி, நிமிடத்தில் தருக?
   1. 2 நாள் 4 மணித்தியாலம் 20 நிமிடம்
   2. 2 நாள் 4 மணித்தியாலம் 2 நிமிடம்
   3. 2 நாள் 2 மணித்தியாலம் 20 நிமிடம்.

பெயர்: ..............................................................
..............................................................
முகவரி: ..............................................................
..............................................................
..............................................................
பாடசாலை: ..............................................................

## தரம் ஐந்து மாணவர்களுக்கான புலமைப் பரிசிற் போட்டி

மேலுள்ள கேள்விகளுக்கான சரியான விடைகளை குறித்து அனுப்பி வாராந்தம் பரிசில்களை வெல்லுங்கள்.

மேலுள்ள கேள்விப் பகுதியை நிரப்பி வெட்டி அதனை மலைமுரசு, இல 159 A, டைக் முக வீதி திருக்கோணமலை என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். வாராந்தம் பரிசுகளை வெல்லுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வெளிநாட்டு மோகம்

அன்றைய ஜாஹிலியாக் கால மக்களின் வற்புறுத்தலுக்கு ஆளாக்கப்பட்டு பெண்கள் போகப் பொருளாக பயன்படுத்தப்பட்டார்கள். ஆனால் இன்று இந்த பெண்களே தங்களைத் தாங்களே கட்டாயப்படுத்தி போகப் பொருளாக மாற்றி அமைத்துக் கொண்டுள்ளார்கள். நெருப்பு சுடும் என்று தெரிந்தும் ஒருவர் அந்த நெருப்பிலே கை வைத்தால் அவரை விட அறிவிலியாரும் இருக்க மாட்டார்கள். அதே போல் இது ஆபத்தானபாதை இதில் விழுந்தால் எழ முடியாது என்று தெரிந்தும் அதிலே விழுகிறார்கள். என்றால் இவர்களை எப்படி அழைப்பது.

பெண்கள் வெளிநாடு செல்வதற்கு ஆண்கள் முக்கிய பங்கை வகிக்கிறார்கள். சில முதுகெழும்பில்லாத ஆண்கள் பெண்களிடம் சீதனம் கேட்பதனாலும் இன்னும் சில கனவன்மார்கள். குடும்பத்தைச் சரியாக கவனிக்காததி னாலும் இன்னும் சில பெண்கள் பெற்றோருக்கு வயதாகி விட்டது. 'குடும்ப சுமையை நாங்கள் தான் சுமக்கவேண்டும் என்பதனாலும் இன்னும் சில பெண்கள் வீடு கட்ட வேண்டும். வசதியாக வாழவேண்டும் என்றும் வெளிநாட்டு மோகத்திற்கு ஆளாக்கப்பட்டு பறக்க ஆரம்பிக் கிறார்கள். பெண்கள் வெளி நாட்டிற்குச் சென்றபிறகு பலவழதமான பிரச்சினைகளை எதிர் கொள்கிறார்கள். கூடுதலான வேலையை சுமத்தப்படுகிறார்கள். பேசியதின் அடிப்படையில் சம்பளம் கொடுக்கப் படுவது கிடையாது. வீட்டு எஜமானர்களால் பாலியல் துஷ்பிர யோகத்திற்கு ஆளாக்கப்படு கிறார்கள். அநடத வீட்டுச் சாரதியாலும் (ஹுசனைநச) பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்படுகிறார்கள். இப்படியான கேவலமான அவல நிலைக்கு தள்ளப்படுகிறார்கள்.



(தொடரும்)

# பெற்றோரை மதித்தல்

ஆகவே தாய் தந்தை சொல்வதை அன்புடன் கேட்டு அவர்களுக்கு நன்மையும்,தொண்டும் அவர்கள் செய்த உதவிகளுக்கு நன்றியும் செலுத்தி அவர்களிடம் மிகவும் பணிந்து தாழ்மையுடன் நடந்து கொண்டால் சொர்க்கத்தை அடைவீர்கள். இதற்கு மாறாக அவர்களுக்கு தொல்லை கொடுத்து தவறாகவும் கடுமையாகவும் அவர்களுடன் பேசி நடந்து கொண்டால் கொதிக்கும் நரக நெருப்புக்கு இரையாவீர்கள்

உங்கள் பெற்றோர்களின் ஒருவரோ, இருவரோ முதியவயத டைந்து உங்களை அண்டி வாழ்ந்தால் அவர்களை வெறுப்பூட்டும் படி 'சீ' என்று சொல்லாதீர்கள் என்று அல்லாஸ் கூறுகின்றான். (17:23)

"உனது தாயின் காலடியில் சுவர்க்கம் இருக்கிறது" எனவே உனது தாயை பற்றிக் கொள்வீராக என நாயம் (ஸல்..... அலைஹிவஸல்லம்) அவர்கள் கூறுகிறார்கள். மேலும் ஒரு கதிஸில் நற்பணிகளுக்கு அதிகம் உரிமையுடையோர் யார்? என்று

ஒருவர் நபிகளிடம் கேட்க அதற்கு நபி அவர்கள் 'உனது தாய்' என்று மூன்று முறை பதில் சொல்லி விட்டு நான்காவதாக உனது தந்தை என்று கூறினார்கள். (புகாரி- முஸ்லிம்) பெற்றோருக்கு நன்மை புரிந்து அவர்களது உள்ளங்கள் மகிழ்ச்சிப் படுத்துவதை இஸ்லாம் ஓர் இபாதத் என கருதுகிறது. எனவே தான் நபி அவர்கள் ஒருவன் தன்தாயை மலர்ந்த முகத்துடன் பார்ப்பது தர்மம் செய்வதை விட மேலானதாகும் என்று கூறியுள்ளார்கள்.

எவன் தன்பெற்றோரைஅல்லது அவர்கள் எவரில் ஒருவரை முதுமை யடைந்த நிலையில் பெற்று அவர்களுக்கு பணிவிடை செய்துசுவர்க்கத்தை அடைந்து கொள்ளவில்லையோ அவன் நாசமாகட்டு அல் ஹதீஸ் எனவே அவற்றிலிருந்து பெற்றோர்களுக்கு பணிவிடை செய்து அவர் களின் மனம் கோணாமல் நடந்து கொள்வது பிள்ளைகளின்

பொறுப்பாகும்அவ்வாறின்றி பெற்றோர்களைத் துன்புறுத்துவது அவர்களை அடிப்பது அவர்களிடம் இருந்த பொருட்களை, சொத்துக்களை அபகரித்து வீட்டை விட்டு விரட்டுவது போன்றன பெரும் பாவங்களாகும். ஆகவே பெற்றோருக்கு மதிப்பளித்து பணிவிடை செய்வதன் மூலம் இம் மையிலும் மறுமையிலும் செய்வதால் ஆயுளும் அதிகரிக் கின்றது. உணவில் அபிவிருத்தியும் ஏற்படுகிறது என்று அல்லாஹ் கூறுகிறான்.எனவே தாய் தந்தையருக்குப் பணி விடை செய்து சுவர்க்கம் நுழைவதற்கு எல்லாம் வல்ல அல்லாஹ் எங்கள் அனைவருக்கும் உதவி புரிவானாக.

# இஸ்லாம் எச்சரிக்கும் மது

ஆனால் இன்று மதுவைத்தரக்கூடிய அப்பொருளுக்கு எத்தனை நவீன பெயர்கள் இந்த உலகில். இதனை எம் சமுதாயத்தினர் உணராமைதான் வருத்திற்குரிய விடயம்.

"இவ்வுலகம் மு.'மின்களுக்கு சிறைச்சாலை, காபிர்களுக்கு சுவர்க்க லோகம்" நபி (ஸல) அவர்கள் இது பற்றிக் குறிப்பிடுகையில் "போதைதரும் அனைத்தும் மதுவாகும். போதை தரும் அனைத்தும் ஹராமாகும். யார் இவ்வு லகில் தொடர்ந்து மது அருந்திய நிலையில் தௌபாச் செய்யாமல் மரணிக்கின்றாரோ அவர் மறுமையில் அகை அருந்தமாட்டார் என்று நபிமொழி"

சகோதரர்களே! சுவர்க்க லோகத்தில் இதைவிட உடலுக்கு கேடு விளைவிக்காத மது ஆறு உள்ளது. அதனை அருந்த இதைவிடுத்து அமலகள் செய்வதன் மூலம் முயற்சி செய்யுங்கள்.

எம்மில் சிலர் பெண்களின் பிரசவ வலிக்கு மதுவை மருந்தாக கொடுக்கிறோம். இதனையும் இஸ்லாம் தடைசெய்துள்ளது. தாரிக் பின் சுவைத் (ரழி) ரபி (ஸல) அவர்களிடம் மது பற்றிக் கேட்டபோது அவர்கள் அதனை தடைசெய்தார்கள். நான் அதனை மருந்தாக பயன்படுத்திக் கொள்கி றேனே என அவர் கேட்டதும் "நிச்சய மாக அது மருந்தல்ல மாறாக நோயாகும்" என்று கூறினார்கள்.

ஆகவே, சகோதரர்களே! யாவரும் இஸ்லாம் கூறிய போதனையை விளங்கி அஸகுர் ஆனும். அல்ஹதீதும் கூறிய முறைப் படி ஹராமாக்கப்பட்ட இந்த கெட்ட மதுப்பழக்கத்தை விட்டு விலகி நாளை மறுமையில் ஜெயம் பெறும் கூட்டத்தாருள் நாமும் ஒருத்தராக ஆகுவோமது என்று கூறி இந்த ஆக்கத்தில் ஏதும் பிழையாக நான் கூறியிருந்தால் அல்லாஹ்வுக்காக வேண்டி என்னை மன்னித்து விடுங்கள்.

முற்றும்




# அழகான பாதத்திற்கு

தினமும் இரவில் படுக்கப் போவதற்கு முன்பு ஒரு பாத்திரத்தில்சூடு தாங்கும் அளவு வெந்நீர், உப்பு, எலுமிச் சைச்சாறு, ஷாம்பு போட்டு பாதங்களை 5 முதல் 10 நிமிடங்கள் வரைஊற வைத்து பிறகு பிரஷினால் சுத்தம் செய்யவும். **இதை வாரத்திற்கு இரண்டு அல்லது 3 நாட்களுக்குச் செய்யலாம்.**

பிறகு பாதங்களை ஈரம்போக ஒரு மெல்லியடவலால் துடைத்து நல்லெண்ணெயை லேசாக சூடு செய்து காலில் தடவலாம். பாதத்தில் வெடிப்பு உள்ளவர்கள் வீட்டில் மருதாணி இலையை விழுது போல நன்கு அரைத்து வெடிப்பு உள்ள இடங்களில் வாரந்தோறும் தடவி வந்தால் வெடிப்பு நீங்கும். நகத்துக்கு டார்க் கலர் பொலிஷ் போடுவதால் நகங்கள் மஞ்சளாக மாறி விடும். அதனால் பொலிஷ் போடு வதற்கு முன் நெயில் பேஸ் போட்டு பொலிஷ்போட வேண்டும். இப்படி செய்து வந்தால் நம் நகங்களை அழகாக பராமரித்துக் கொள்ளலாம். பாதங்கள் மிருதுவாக இருக்க வேண்டுமானால்



பீர்க்கங்காய் நார் கொண்டு தினமும் குளிக்கும்போது பாதத்தில் நன்றாக 5 நிமிடம் தேய்த்து வந்தால் பாதங்கள் மிருதுவாகி விடும்.

கால் விரல்களில் நகச்சுத்தி வந்தால் இதை சரியாக்க எலுமிச்சைப் பழத்துடன் மஞ்சள் தேய்த்து பத்துப் போட்டு வந்தால் நகச்சுத்தி நீங்கும். கால் விரல் நகத்தின் ஓரத்தில் மண் நிறைந்து விட்டால் நல்லெண்ணெயை ஒரு விளக் கில் ஏற்றி வைத்து ஒரு தீக்குச்சியை அந்த நெருப்பில் காட்டி வைத்து அந்த விரலின் நிறமும் சூடு செய்து அந்த விரல் நகத்தின் ஓரங்களில் தடவவும். 2 அல்லது 3 முறை செய்தபின் அதில் உள்ள அழுக்கு எல்லாம் வந்து விடும். .நகத்தின் ஓரங்களில் ஊசியை வைத்து சுத்தம் செய்வதைத் தவிர்க்கவும்.

# கூந்தலுக்கு வைத்தியம்



தேங்காயைத் தண்ணீர் சேர்க்காமல் அரைத்துப் பால் பிழியவும். இதை இரும்புக் கடாயில் காய்ச்சினால் எண்ணெய் தனியாக வரும். அந்த எண் ணெயைத் தலையில் தடவி ஊறிய பின் சீயக்காய் அல்லது கடலை மாவு தேய்த்து அலசவும்.

சீப்பு உங்களுக்கென்று தனியாக வைத்துக்கொள்ளவும். வாரத்தில் மூன்று தடவை அதைக் கழுவ வேண்டும். உலோகத்தால் ஆன சீப்புகளைத் தவிர்க்கவும். நல்ல மரச் சீப்பினால் அழுந்த வாரினால் மயிர்க் கால்களில் ரத்த ஓட்டம் அதிகமாவதோடு முடி வளர்வதும் தூண்டப்படுகிறது.

விளக்கெண்ணையைப் போல கூந்தலுக்கு உதவுவது வேறு எதுவுமே இல்லை. விளக்கெண்ணெய் இரண்டு டேபிள் ஸ்பூன், தேங்காய் எண்ணெய் ஒரு டேபிள் ஸ்பூன் எடுத்து இலேசாகச் சுடவைத்து மயிர்க்கால்களில் நன்றாகப் படும்படி தடவி விடவும். ஒரு பழைய துணியை வெந்நீரில் நனைத்து பிழிந்து, தலையின் மீது சுற்றவும். அந்தச் சூடு உள்ளே இறங்கும். சற்று ஆறியதும் மீண்டும் அவ்வாறு செய்யவும். பிறகு தலையைஷாம்பூ போட்டு அலசி விடவும். முடி உதிராமல் இருக்க முத்தான வழி இது. கூந்தல் வறண்டு இருந்தால் ஒரு கிண்ணத்தில் மருதாணிப் பொடி, தேங்காய்ப்பால், தேங்காய் எண்ணெயும் சேர்த்துக் குழைத்துத் தலையில் மசாஜ் செய்யவும். அரை மணி நேரம் கழித்துத் தலைக்குக் குளிக்கலாம். தலைக்கு சீயக்காய்த்தூள் தேய்த்துக்கொள்ளும் போது, சீயக்காய்த் தூளுடன் தண்ணீருக்குப் பதில் மோர் விட்டுக் கரைத்து தேய்த்துக் குளித்தால், தலை முடியில் உள்ள அழுக்கு சுத்த மாக நீங்கி விடும். சீயக்காயும் குறைந்த அளவே போதும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## அலையன்ஸ் நிறுவனத்தின் கௌரவிப்பு



திருகோணமலை அலையன்ஸ் நிதி நிறுவனமானது கடந்த 18.10.13 அன்று ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரிட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கான விருது வழங்கல் நிகழ்வு ஒன்றை மேற்கொண்டது. குறித்த நிறுவனத்தின் அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாணவர்களுக்கான விருதுகளை அந்நிறுவனத்தின் பிராந்திய முகாமையாளர் திரு.பிரதீபன் அவர்கள் தலைமையேற்று



வழங்கி வைத்தார். முதற்கட்டமாக நடைபெற்ற இந்நிகழ்வில் இலிங்கநகர் கோணலிங்க வித்தியாலயம், சாம்பல்த்தீவு,சல்லி மகா வித்தியா லயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த 49 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். (கலாஹரன்)

## அட்டாளைச்சேனை மாணவனுக்குத் தங்கப்பதக்கம்



துரிதமான திறன்கள் பயிலும் திட்டம் (ASAP - Accelerated Skills Acquisition Programe) எனும் தலைப்பின் கீழ் உலக ஆசிய வங்கியும் இலங்கை கல்வியமைச்சும் இணைந்து நடாத்திய இளைஞர்களுக்கான கணனி, ஆங்கிலம், தொழிழ்த்திறன் போன்ற பாடவிதானங்களைக் கொண்ட பயிற்சிப்பட்டறையை நிறைவு செய்து அதில் ஒன்லைன் மூலமான பரீட்சை மட்டக்களப்பு கேட்வே நிலையத்தில் நடாத்தப்பட்டது. இவ் ஒன்லைன் மூலமான பரீட்சையில அட்டாளைச்சேனையை சேர்ந்த பி.எம்.பரஹாத் 98 புள்ளிகளைப் பெற்று தங்கப்பதக்கத்தினையும் பெற்றுக்கொண்டதுடன் அவருக்குக் கற்பித்த ஆசிரியர் MJA. நௌசாட் கொளரவப்படுத்தப்படும் நிகழ்வும் இங்கு இடம்பெற்றது.

## தமிழப் பெண்ணின் சிங்களக் கணவர் அடித்துக் கொலை


ஏராவூர்ப் பிரதேசத்தில் முப்பத்தியிரண்டே வயதான குடும்பத்தர் ஒருவர் கைகலப்பில் கொல்லப்பட்டுள்ளார்.

ஏறாவூர் தேவாபுரத்திலேயே இக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகக் காவல்துறை அலுவலகத்தில் அவரது மனைவியால் முறையிடப்பட்டுள்ளது.

தனது கணவரான நத்திலகே நெல்சன் கோசல வே குடும்பத் தகராறினால் அடித்துக் கொல்லப் பட்டதாக அவரது இருபத்தியெட்டு வயதான மனைவி விஜேந்தினி காவல்துறைக்கு முறையிட்டுள்ளார்.

தனது கணவரை உடனடியாகச் சந்திவெளி பிரதேச வைத்தியசாலையில் சேர்த்த போதும் அவர் அன்றைய தினம் மாலை மரணமடைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். காவல்துறையினர் விசாரணைகளை முடுக்கியுள்ளனர்.

## சம்மாந்துறையில் கல்வி மேம்பாட்டு அமைப்பு உதயம்



சம்மாந்துறை கல்வி மேம்பாட்டுக்கான அமைப்பானது ஒய்வூதியர் நலன்புரி அமைப்பின் அயராத முயற்சியினால் உருவாக்கப் பட்டுள்ளது.

இவ்வமைப்பின் கன்னிக் கலந்துரையாடலானது 2013-10-18ம் திகதி அல் அமீர் வித்தியலயத்தில் இடம் பெற்றது. இந் நிகழ்வில் இவ் இடைக்கால குழுவும் சம்மாந்துறை கல்வி அபிவிருத்தியில் ஆர்வமுள்ள சில இளைஞர்களும் கலந்து கொண்டு சம்மாந்துறையின் கல்வி தொடர்பான விடயங்களை கலந்துரையடியுள்ளனர்

மேலும் இவ்வமைப்பில் இணைந்து கொண்டு சம்மாந்துறையின் கல்வி உயர்ச்சிக்கு உழைக்கும் படி இச் சபை அழைக்கின்றது அழைக்கின்றது. (தொடர்புகளுக்கு: 0777 866068)

(பர்ஹான்)

## வெள்ளாவெளியில் தொழிற்சந்தை

மட்டக்களப்பு மாவட்டத்தின் போரதீவுப்பற்று பிரதேச செயலகத்தின் மனிதவலு அபிவிருத்திப் பிரிவினால் இளைஞர் யுவதிகளின் வேலைவாய்ப்பு பிரச்சனையினைக் கருத்தில் கொண்டு இன்று மாபெரும் தொழில் சந்தை ஒன்று நடத்தப்பட்டது.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்டத்தினைப் பிரதிநிதித்துவப் படுத்தக்கூடய தனியார் நிறுவனங்கள் கம்பனிகள் போன்றவைகளின் உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்நிகழ்வில் போரதீவுப்பற்று பிரதேசத்தில் வேலைவாய்ப்பற்றிருக்கும் சுமார் ஆயிரத்திற்கும் அதிகமான இளைஞர் யுவதிகள் கலந்து கொண்டிருந்தனர்.



# தமிழியல் விருது - 2013



எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் வழங்கிய தமிழியல் விருதுகளில் 2012ம் மற்றும் 2013ம் ஆண்டுக்கான விருதுகளைப் பெற்றவர்களைப் படங்களில் காணலாம்





எழுத்தாளர் ஊக்குவிப்பு மைய ஸ்தாபகர் ஓ.கே. குணநாதன் உயர் தமிழியல் விருதை 2012ம் ஆண்டில் பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்களும் 2013ம் ஆண்டில் இரா.நாகலிங்கம் (அன்புமணி) அவர்களும் பெற்றுக் கொண்டுள்ளனர். இவ் விழாவில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான சிறுவர் இலக்கிய போட்டி அறிமுகஞ்செய்யப் பட்டது. "சிதைந்து போன தேசத்தைக் கல்வி. கலை . இலக்கியத்தினால் கட்டி எழுப்புவோம்" - எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம்









Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# செத்துக் கரையொதுங்கிய ஆயிரக்கணக்கான மீன்கள்

## டைனமிற் தாக்குதலா காரணம்???





திருகோணமலையின் உட்துறைமுக வீதிக் கடற் பிரதேசத்தில் ஆயிரக்கணக்கான மீன்கள் திடீரெனச் செத்துக் கரையொதுங்கியுள்ளன. கீரி வகை மீனினமே அவ்வாறு பெருமளவில் செத்துக் கரையொதுங்கியுள்ளது.

சில வருடங்களில் அவ்வாறு பெருமளவு மீன்கள் செத்து உட்துறைமுகக் கரையில் ஒதுங்குவது இயற்கையான நிகழ்வாக இருந்தாலும் அவ்வாறு செத்து ஒதுங்கிய மீன் இனம் "பேச்சாலை" என்னும் இனத்தைச் சேர்ந்தது என மீனவர் ஒருவர் மலைமுரசிற்குத் தெரிவித்தார்.

ஆனால் இம்முறை "கீரி" மீன் இனம் செத்துக் கரையொதுங்கியிருப்பதை இயற்கையான விடயம் என கருத முடியாது எனத் தெரிவித்த அவர் இதற்குக் காரணம் பெரும் மீன் கூட்டம் ஒன்றின் மீது நடாத்தப்பட்ட டைனமிற் குண்டுத் தாக்குதலாகவே இருக்க வேண்டும் எனச் சந்தேகம் தெரிவித்தார்.

மீன்பிடி நடவடிக்கைகளில் தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறையாக டைனமிற் தாக்குதல் மீன்பிடி இருப்பது குறிப்பிடத்தக்கது. திருகோணமலை நகரசபை உடனடியாகவே இம் மீன்களைக் கடற்கரையிலேயே வெட்டிப் புதைக்கும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

## அட்டாளைச்சேனையில் நீர்ப்பாசன வாரம்

மத்திய மாகாண நீர்ப்பாசனத் திணைக்கள ஏற்பாட்டில் நீர்ப்பாசன வாரத்தை முன்னிட்டு அட்டாளைச்சேனையில் வேலைத்திடட்டமொன்ற ஆரம்பித்து வைக்கப்பட்டது. அந் நிகழ்விற்குக் கிழக்கு மாகாண நீர்ப்பாசன அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெவ்வை, மாகாணப் பணிப்பாளர் எஸ்.திலகராஜா, பிராந்திய நீர்ப்பாசனப் பணிப்பாளர் எஸ். வீரசிங்க உள்ளிட்ட அதிதிகள் வரவேற்கப்படுவதையும் அமைச்சர் உதுமாலெவ்வை உரையாற்றுவதையும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படுவதையும் காணலாம்.







## -மொரட்டுவை பல்கலைக்கழக அழைப்பிதழ் - தமிழ் செத்துக் கிடக்கிறது




# திருமலையில் பாரம்பரியக் கலைகளின் திருவிழா




இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத் துறைப் பீடாதிபதி கலாநிதி ஜெய்சங்கர் அவர்களுடன் இணைந்து 25ம் திகதி தொடக்கம் 27ம் திகதி வரை பாரம்பரியக் கலைகளின் திருவிழாவொன்றைத் திருகோணமலை மாவட்டத்தில் நடாத்துகின்றது.

"மடை" என்ற பெயரில் நடைபெறவுள்ள இக்கலைத்திருவிழாவிற்கு இந்தியாவிலிருந்தும் பேரறிஞர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

காலை மற்றும் மாலை நிகழ்வுகளாகத் தொடர்ந்து மூன்று நாட்களுக்கு நடைபெறவுள்ள இவ்விழாவில் பல்வேறுவகையான கூத்துக்கள் நிகழ்த்திக் காட்டப்படவிருப்பது முக்கியமான விடயமாக உள்ளது.

# தேசிய அணியில் கிண்ணியா மாணவன்



இலங்கை கால்பந்தாட்ட அணிக்கு கிண்ணியாவை சேர்ந்த ஒருவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். கிண்ணியா மத்திய கல்லூரியில் கல்வி பயிலும் உபைதுல்லாஹ் இஹாம் என்ற மாணவனே இலங்கை கால்பந்தாட்ட அணிக்கு தெரிசெய்யப்பட்டுள்ளார். தாய்லாந்தில் நடைபெறவுள்ள கால்பந்தாட்ட போட்டியில் இலங்கை அணி சார்பாக பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கருத்தடை வில்லைகளுடன் கல்முனைவாசி கைது

ஆயிரக்கணக்கான கருத்தடை வில்லைகளுடன் பயணப்பட்ட கல்முனைவாசியொருவரைக் காவல்துறை கைது செய்துள்ளது. சர்வதேச விமான நிலையம் ஊடாகப் பயணப்பட்ட இவஉ இந்தியாவிலிருந்து இலங்கையை நோக்கி வந்தடைந்த போதே கைதாகியுள்ளார்.

சூட்சுமமான முறையில் விசுக்கோத்துச் சிறு பொதிகளுக்குள் மறைத்து வைக்கப்பட்டே இம் மாத்திரைகளைக் கடத்த அவர் முனைந்துள்ளார். சுமார் 3200 வில்லைகள் அப் பொதிகளுக்குள் இருந்ததாகவும் அவற்றின் இலங்கை மதிப்பு நேரடிச் சந்தையில் நூற்றைம்பத்து இரண்டாயிரம் ரூபா என காவல்துறை மதிப்பிட்டுள்ளது.

# வின்சென்ட் தேசிய பாடசாலைக்கு தேசிய விருது

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டுப் பாடசாகைளுக்கிடையிலான வேலைத் திட்டங்கள் தொடர்பாக மேற்கொள்ளப் பட்ட அளவீட்டிற்கு அமைய வின்சென்ட் தேசிய பாடசாலை தேசிய விருதுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

வருடாந்தம் ஒக்டோபர் மாதம் தேசிய வாசிப்பு மாதமாகப் பிரகடனஞ் செய்யப்பட்டுள்ளதுடன் அம் மாதத்தில் தேசிய பாடசாலைகளுக்கிடையே அவை மேற்கொண்டுள்ள வாசிப்பு அபிவிருத்தி நடடிக்கைகளை மதிப்பிட்டு அடுத்துவரும் ஆண்டில் தேசிய விருதுகள் அறிவிவக்கப்படுகின்றன.
அதற்கமைய 2012ம் ஆண்டில் சிறப்பாக வாசிப்பு மாத வேலைத்திட்டங்களை முன்னெடுத்தமைக்காக 2013ல் வின்செண்ட் பாடசாலை தேசிய விருதுக்குத் தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நடந்து முடிந்த மாகாண மட்ட ஆங்கில தினப் போட்டிகளில் 79 புள்ளிகளுடன் வின்செண்ட் தேசிய மகளிர் கல்லூரி முதலாம் இடத்தை மாகாண மட்டத்தில் பெற்றுச் சாதனை புரிந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. இவ் வெற்றியில் 11 முதலாம் இடங்களையும் 7 போட்டிகளில் 3ம் இடத்தையும் கல்லூரி பெற்றுக்கொண்டுள்ளது.

## பட்டணமும் சூழலும் பிரதேசசபையில் 2013ம் ஆண்டின் உள்ளூராட்சி வாரம்








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org